# மலையக மீரியப்பெத்தை மண்சரிவும் தாக்கமும் - அதன் எதிரொலியும்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரமம்
20.02.2016

உ

சிவமயம்

# மலையக
# மீரியப்பெத்தை மண்சரிவும்
# தாக்கமும் - அதன் எதிரொலியும்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரமம்
20.02.2016

ஓம்

அன்பே சிவம்

# மலையக மக்களின் தூய அன்பு

சைவத்தின் அடி நாதம் "அன்பே சிவம்". மனிதனை முக்தி நிலைக்கு இட்டுச் செல்வதற்கும் அன்புதான் அடிப்படை. சுயநலம் கொண்ட அன்பிலிருந்து படிப்படியாக எம்மை தூய்மைப்படுத்த சுயநலமற்ற அன்பு உள்ளம் எம்மிடத்தில் சிறிது சிறிதாக குடி கொள்ளும். இந்த படிப்படியான தூய்மைப்படுத்தல் இறுதியில் எம்மை முக்திக்கு இட்டுச் செல்லும்.

மீரியபெத்த மண்சரிவை அறிந்த யாழ்பாணத்திலுள்ள சில தொண்டர் அமைப்புக்களும் சில ஆன்மீக அமைப்புக்களும் அவ் விடயம் பற்றி தமக்குள் கலந்தாலோசித்தனர். அதனைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமி அவர்களின் தொண்டர்களும் வேறும் சில தொண்டர் அமைப்புக்களின் தொண்டர்களும் இணைந்து 07.11.2014 அன்று மலையகம் நோக்கிய எமது கன்னிப் பயணம் ஆரம்பமானது. இந்த மலரில் வேறு குறிப்புக்களில் குறிப்பிடப்பட்ட அமைப்புக்களுடன் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் என்ற எமது அமைப்பின் தொண்டர்களும் இந்தப் பயணத்தில் இணைந்து கொண்டனர்.

ஒரு பயணத்தை மேற்கொண்டு வழங்கவுள்ள பொருட்களையும் அன்புடன் வழங்கி ஆறுதல் வார்த்தை கூறி அவர்களை ஆற்றுப்படுத்திவிட்டு திரும்புவதென்ற எண்ணத்துடன் ஆரம்பித்த பயணம், சிவனின் திருவிளையாடலால், நாம் அங்கு சென்ற அன்றே வேறு விதமாக மாறி, மாதாந்தப் பயணமாக மாறியது. இந்த மாற்றத்திற்கான முன்மொழிவை மோகனதாஸ் சுவாமி அவர்கள் மலையக மண்ணிலிருந்தே முன்மொழிந்தார். அவர் கூறியது இதுதான் "நாம் மாதாந்தம் ஒருமுறை மலையகப் பயணம் மேற்கொண்டு எம்மாலான தொண்டை மேற்கொள்வோம் விருப்பமான தொண்டர்கள் எம்முடன் இணையலாம். சந்நிதி முருகன் அதற்கான அருள் தருவான் என்றார்".

அன்றிலிருந்து இன்றுவரை அவர் வாக்குப்படி மாதாந்தப் பயணம் தொடர்கின்றது. நான் அண்மையில் இந்தியா சென்றிருந்த காரணத்தினாலும் எனது உள்ளூர் தொண்டுடனான தவிர்க்க முடியாத ஓரிரு சந்தர்ப்பத்தைத் தவிர ஒவ்வொரு மாதாந்தப் பயணத்திலும் எமது தொண்டர்களும் நானும் தவறாது மலையகத் தொண்டில் கலந்து கொள்வது வழமையாகிவிட்டது.

கன்னிப் பயணம் பற்றிய சில பொதுவான விடயங்கள் வேறு கட்டுரைகளில் குறிப்பிடப் படுவதனால் நான் அக்குறிப்புக்களைத் தவிர்த்துக் கொள்கின்றேன். மலையகப் பயணத்தில் நான் அவதானித்த பொதுவான முக்கிய தேவை வருமாறு.

மக்களுக்கு சமயம் சமூகம் சார்ந்த அனைத்து விடயங்களிலும் கரிசனையுடனான உதவி தேவைப்படுகின்றது. (கரிசனை என்ற சொல்லிற்கான காரணத்தை வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்).

முதல் பயணத்தின் செயற்பாட்டின் முடிவில் பயணத்தில் கலந்து கொண்ட தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சில விடயங்களுக்கான தொண்டை தாம் தொடர்ந்து மேற்கொள்ள இணக்கம் தெரிவித்தனர். அவையாவன அறநெறி மேம்பாடு, ஆன்மீக மேம்பாடு, கல்வி, மருத்துவம், யோகாசனம் ஆகியனவாகும்.

எமது தொண்டு ஒரு வருடம் கடந்த நிலையில் நாம் பல நூற்றுக் கணக்கான மக்களை சந்தித்துள்ளோம். அவர்களுடன் உறவாடியிருக்கின்றோம், சிலருடன் கூடுதலான

உறவை தொடர்ந்து பேணி வருகின்றோம். பல ஆலயங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் சில ஆலயங்களில் தரிசனம் பெற்றிருக்கின்றோம். பல அறநெறிப் பாடசாலைகளை நேரில் பார்வையிட்டுள்ளோம். ஒரு சில இல்லங்களில் எமக்கு தங்கும் வசதியும் உபசரிப்பும் கிடைத்து உள்ளது. இவை அனைத்திலும் நாம் கண்டு அனுபவித்தது "அன்பு". அதாவது உறவு அல்லது பிணைப்பு, அதாவது பல ஆன்மாக்களுக்கிடையிலான பிணைப்பு. இதுதான் எமது தொண்டிற்கு கிடைத்த பரிசு, அதுதான் "அன்பு".

"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" இந்தச் சான்றோர் கூற்றிற்கு எமது தொண்டு சாட்சியாக உள்ளது. எமது தொண்டு தொடரவுள்ளது.

காகல் தோட்ட மண்டபத்தில் நாம் ஓர் கூட்டுப்பிரார்த்தனையில் ஈடுபட்டோம். அப் பிரார்த்தனை நடைபெற்ற தோட்டத்தில் கத்தோலிக்கர்கள், பௌத்தர்கள் இந்துக்கள் வேலை செய்கின்றனர். கூட்டுப் பிரார்த்தனை வேளையில் சிலர் பரவசமேலீட்டிற்குட்பட்டனர் சிலர் கண்ணீர் சிந்தினர். (சிலருக்கு ஆனந்தக் கண்ணீராகவும் சிலருக்கு வாழ்வில் தாம் அனுபவிக்கும் துன்பத்தை நினைவூட்டுவதாயுமிருந்திருக்கலாம்). அந் நிகழ்வில் கலந்து கொண்ட ஓர் பௌத்தமத சிங்களம் பேசும் அம்மா கூறினார் "எனக்குத் தமிழ் தெரியாது ஆனால் நீங்கள் செய்த கூட்டுப்பிரார்த்தனை என்னை ஆட்கொண்டு விட்டது. நான் என்றும் இவ்வாறான ஒரு பரவச நிலையை அடையவில்லை".

மற்றும் ஒரு கத்தோலிக்கர் கூறினார் "இந்தக் கூட்டுப் பிரார்த்தனை அனைவரையும் ஒருக்கிணைக்கும் ஓர் அற்புதமான செயல்".

நாம் அறநெறிப் பாடசாலைகளிலும் மக்கள் கூடியிருக்கும் ஆலயங்களிலும் கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகின்றோம். மேற் கூறிய அனுபவங்களை இந்துக்களும் பெறுகின்றனர். இறைவன் மேல் நம்பிகை வைக்கும்படியும் குறைந்தது காலையும் மாலையும் தவறாது இறை வழிபாட்டில் ஈடுபடும்படியும் நாம் மக்களை ஊக்கப்படுத்தியும் பக்குவப்படுத்தி யும் வருகின்றோம். நாம் "அன்பே சிவம்" என்று திருமந்திரத்தில் பாடப்பட்டுள்ளது போன்று அதனை எமது வழிபாடாக்கி வருகின்றோம். ஓர் மக்கள் சந்திப்பும் நிகழ்வும் நடைபெற்று முடிந்தபின் எமது அன்பர்களுடன் நடைபாதையால் நடந்து வந்து கொண்டிருந்தவேளை ஓர் சிறிய பெண் பிள்ளை எம்மைப் பார்த்து கைகூப்பி வணங்கி கம்பீரமான குரலில் "அன்பே சிவம்" என்று சிரித்த முகத்துடன் கூறினாள். அவ்வேளையில் அந்தச் சிறுமியிடத்தில் நான் சிவனைக் கண்டேன்.

இதுதான் எமது தூய தொண்டிற்காக சிவன் தரும் பரிசு, அங்கீகாரம். இதற்கு அப்பால் எமக்கு என்ன வேண்டும்? எல்லோரும் எமது தொண்டில் இணையுங்கள். அவன் அருளைப் பெறுங்கள்.

பதுளை, பண்டாரவளை என்று ஆரம்பித்த தொண்டு பொலநறுவை, கண்டி, அம்பாறை என்று வேறு மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. பொலநறுவையில் சிவதிரு. சுதாகரன் என்ற ஓர் இளைஞனின் முயற்சியால் 2010 ஆம் ஆண்டு 05 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வந்த ஓர் அறநெறிப்பாடசாலை மோகனதாஸ் சுவாமி அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி எமது தொண்டை அவர்கள் அறநெறிக்கும் இணைத்துக் கொண்டனர். நாம் அவர்களுடன் தொடர்புகொண்ட வேளை அறநெறிப்பாடசாலையில் பயிலும் பிள்ளைகளின் எண்ணிக்கை 200 இற்கு மேற்பட்ட பிள்ளைகளை தன்னகத்தே கொண்ட நிலைக்கு வளர்ச்சி கண்டிருந்தது. பெரும்பான்மை பௌத்த மக்கள் சூழவுள்ள ஓர் இடத்தில் ஓர் பெரிய ஆலமரத்தின் நிழலில் இந்த அறநெறி வளர்ச்சி கண்ட பெருமை தம்பி சுதாகரனுக்கும் அவருக்குத் துணையாக

இருக்கும் ஆசிரியர் குழுவிற்கும் மக்களையுமே சாரும். அவர்கள் முயற்சி போற்றுதற்குரியது. சந்நிதியான் ஆச்சிரமத்தின் மூலம் அந்த அறநெறிப் பிள்ளைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் அவர்கள் கட்டிக் கொண்டிருக்கும் கட்டிடத்திற்கும் பல உதவிகள் வழங்கப்பட்டு ஊக்கமளிக் கப்பட்டது.

எமது நிறுவனம் சந்நிதியான் ஆச்சிரமத்தின் அனுசரணையுடன் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இணைந்து கொண்ட தொண்டர்களுக்கு இரண்டு கட்டமாக சிவ தீட்சை வழங்கி ஒவ்வொரு குழுவிற்கும் மூன்று நாட்கள் வதிவிடப் பயிற்சி வழங்கி மொத்தம் 54 சிவ தொண்டர் குடும்பத்திற்கான அன்பர்களை உருவாக்கியுள்ளது. இதில் பெரும்பான்மையான வர்கள் மலையகத்தையும் பொலநறுவையையும் சேர்ந்த எம்முடன் உறவு கொண்டவர்களாகும். அவ்வாறு பயிற்றுவிக்கப்பட்ட அன்பர்கள் மூலம் தற்பொழுது எமது தொண்டு விரிவாக்கப்பட்டு வளர்ச்சி கண்டு வருகின்றது.

கண்டியிலிருந்து தொண்டாற்றும் சின்மயா மிஷன் கார்திக் சைதன்யா சுவாமி அவர்களுடன் இணைந்து எமது மலையகத் தொண்டர் குழு ஓர் அறநெறிப் பாடசாலையையும் அமைத்து சந்நிதியான் ஆச்சிரமத்தினால் அவர்கள் முயற்சிக்கு உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

அம்பாறையில் செயற்படும் சில அறநெறிப் பாடசாலைகளுக்கும் சந்நிதியான் ஆச்சிர மத்தினால் அவர்கள் முயற்சிக்கு உதவிகளும் வழங்கப்பட்டது.

பதுளையிலுள்ள மலையக பெண்கள் சிறுவர் இல்லத்தின் நிர்வாகத்திற்கும் பிள்ளைகளுக்கும் பலவிதமான உதவிகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றது. பிள்ளைகளை கல்வி முயற்சியில் ஊக்கப்படுத்துவதுடன் ஆன்மீக விழிப்பூட்டலும் கூட்டுப் பிரார்த்தனை உட்பட யோகாசனப் பயிற்சி ஆகியனவும் வழங்கப்படுகின்றது. அவ்வில்லத்திற்குப் பொறுப்பான சிவதிரு கிருஷ்ணசாமி ஐயா அவர்களும் அவரது செல்வப் புதல்வி பாமினி அவர்களும் அங்குள்ள பிள்ளைகளும் எம்மை சொந்த இரத்த உறவுகள்போல் அனுசரித்து ஆதரிப்பது போற்றுதற்குரிய செயலாகும்.

எமது நிறுவனம் பொது மக்களுக்கும், அறநெறி ஆசிரியர்களுக்கும், அறநெறிப் பிள்ளைகளுக்கும் யோகாசனப் பயிற்சி, மௌன விரதப் பயிற்சி, மனித மாண்புகள், தலைமைத்துவப் பண்புகள் ஆகியவற்றைப் போதிப்பதுடன் கடவுள் வழிபாட்டை ஊக்குவிக்கும் போதனைகளிலும் செயற்பாடுகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது.

மக்களிடத்தில் இறை நம்பிக்கையை மேம்படுத்தி அவர்களை நற் பிரசைகளாக்கி அவர்கள் வாழ்வில் ஒளியூட்டுவதற்கான தொடர் முயற்சிகளில் மலையக தொண்டை மேற்கொள்ளும் நாம் அனைவரும் இணைந்து ஈடுபடவுள்ளோம்.

எமது தொண்டின்மூலம் ஓர் மறுமலர்ச்சிப் புரட்சி ஏற்பட்டு வருகின்றது. எமது தொடரும் தொண்டு அதற்கு வழி சமைக்கவுள்ளது திண்ணம்.

அனைத்து மக்களின் நல் வாழ்விற்காக இவ்வேளையில் எல்லாம் வல்ல சிவனிடம் அனைவரும் இணைந்து பிரார்த்திப்போம்.

அன்பே சிவம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*இரத்தினம்பிள்ளை. கலியுகவரதன்*
*சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம்.*

அன்பே சிவம்

# மலையகத்து உறவுகளுடன் ஓர் அன்புப் பிணைப்பு

2014ஆம் ஆண்டின் ஐப்பசி மாதத்தில் மலையகத்தின் பதுளை மாவட்டத்தின் கொஸ்லந்தை - மீரியபெத்த பகுதியில் இடம்பெற்ற மண்சரிவின் சோகம் தந்த உள்ளத்து உணர்வின் செயலுருவாக்கத்தின் ஓர் ஆண்டு பதிவுகள் இன்று சந்நிதியான் ஆச்சிரமத்தால் சைவத்தமிழ் உறவுகளிடையே பகிரப்படும் இத்தருணத்தில் கடந்த காலத்தின் இப்பதிவுகளுடன் தன்னையும் பிணைத்துக் கொண்டுள்ள சைவ மகா சபை மனநிறைவு அடைகின்றது.

அன்று அந்த மனித பேரவலம் மலையகத்தின் எமது சொந்தங்களுக்கு ஏற்பட்டபோது காயம்பட்ட உள்ளங்களுக்கு ஒத்தடம் கொடுக்க சைவத் தமிழ் அமைப்புக்கள் வடக்கிலும், கிழக்கிலும் முன்வந்தன. இவ்வாறுதான் சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் வடக்கையும், கிழக்கையும் சார்ந்த சைவ மகா சபையின் சிவத்தொண்டர்கள், ஆச்சிரம அன்பர்கள் தங்கள் மனிதநேயப் பயணத்தை யாழ்ப்பாணத்திலிருந்து பதுளையைநோக்கி ஆரம்பித்தனர்.

சைவம் காட்டும் உயரிய மானிடமாகிய மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதைத் தாரகமாகக் கொண்ட இந்த அமைப்புக்கள் அன்று தொடக்கம் இன்றுவரை மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் தமது ஆன்மீக - மனிதநேயப் பயணத்தைத் தொடர்ந்தவண்ணம் உள்ளன. மாதத்தில் இரு நாட்கள் நடைபெறுகின்ற மலையக பயணத்தின் ஊடாக ஏற்பட்டிருக்கின்ற அன்பின் பிணைப்புக்களே இங்கு சுவாமிகளால் பதிவிடப்பட்டிருக்கின்றது.

அறநெறி கருத்தரங்குகள், கணித விஞ்ஞான செயலமர்வுகள், அறநெறிப் பாடசாலைகள், மலையக சிறுவர் இல்லம் என்பவற்றை உறுதிப்படுத்தும் தொடர் செயற்பாடுகள் என விரிவடைந்து செயற்பாடுகள் வடக்கு, கிழக்கு, மலையக சைவத்தமிழ் உறவுகளிடையே ஆழமான பிணைப்பை ஏற்படுத்தி வருவதுடன் பதுளை மாவட்டத்தின் கணித விஞ்ஞான கல்வியிலே புதிய அத்தியாயத்தையும் திறந்து வைத்துள்ளது. இதுவரை காலமும் கா.பொ.த உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞான பாடங்களை ஆசிரியர்களின்மையால் கற்கும் வாய்ப்பை இழந்திருக்கும் பதுளையைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவுவதற்கு சைவ மகா சபைக்கு கிடைத்த வாய்ப்பை இறை சிவனின் பெருங்கருணை என்றே கருதுகின்றோம். 13 மாணவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தின் உறுதுணையுடன் சைவத்தமிழ் உதவும் கரங்களின் அனுசரனையுடன் சைவ மகா சபையினரால் கடந்த ஆண்டு பொறுப்பேற்கப்பட்டு கொக்குவிலிலுள்ள சபையின் தலைமையகத்தில் தங்க வைக்கப்பட்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று வருவதோடு தொண்டுள்ளத்தோடு தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களாலும், மருத்துவ மாணவர்களாலும் கற்பிக்கப்பட்டு வருகின்றனர்.

நிறைவாக இப்பணிகள் யாவற்றையும் வழிகாட்டி தலைமையேற்று முன் நகர்த்தி செல்லும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளும் அவரோடிணைந்த அன்பர்களும் மலையகத்தில் வேலைத் திட்டங்களை ஒருங்கிணைக்கும் மலையக அதிபர், ஆசிரியர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட அன்பர்களுக்கும், சைவ மகா சபை தமது நன்றியறிதலை வெளிப்படுத்தி நிற்பதோடு, சந்நிதியான் ஆச்சிரம வெளியீடாக மலர்கின்ற "மலையக மண்சரிவின் தாக்கமும் அதன் எதிரொலியும்" என்கின்ற இந்நூல் மனிதநேயத்தை இளம் தலைமுறைகளுக்கு விதைப்பதற்கு வழிகோல அன்பின் திருவுருவான அம்மையப்பனின் தாள் பணிந்து நிற்கின்றோம்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

*-அகில இலங்கை சைவ மகா சபை-*

# வாழ்த்துச் செய்தி

சந்நிதியான் ஆச்சிரமத்தின் சேவையின் நிமித்தம் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு நல் ஆசிகளை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

வட மாகாண தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமம் பல வருட காலமாக சமூக, சமய சேவைகளை முன் எடுத்து வரு கின்றது. இச்சேவைகள் பலரின் பராட்டுகளைப் பெற்றுவரும் அதேவேளை அதன் சேவைகள் இன்று மலையகத்தின் பதுளை, கண்டி, பண்டாரவளை போன்ற நகர தோட்ட பிரதேசங் களுக்கும் முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

வடமாகாணத்தை மையமாகக் கொண்டு இயங்கிய சந்நிதியான் ஆச்சிரமம் கடந்த ஒரு வருடத்திற்கு முன் 2014 ஒக்டோபர் மாதம் ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் ஹப்புத்தளை மீரியபெத்த தோட்டத்தில் இடம்பெற்ற பாரிய மண்சரிவு அனர்த்தத்தினால் 227 குடும்பங்களைச் சேர்ந்த 887 பேர் இவர்களில் 423 ஆண்கள் 332 பெண்கள் மற்றும் 132 குழந்தைகள் என பாதிக்கப்பட்ட, எமது உறவுகளுக்கு உதவி செய்வதற்காக சந்நிதியான் ஆச்சிரமத்தின் பொறுப்பாளர் கௌரவ மோகனதாஸ் சுவாமி அவர்களின் தலைமையில் 50க்கு மேற்பட்ட குழு இங்கு விஜயம் செய்ததை தொடர்ந்தே இன்றுவரை சந்நிதியான் ஆச்சிரமம் மலையகத்திலும் தமது சமூக சமய பணியாற்றி வருகின்றது.

இந்து சமயம் அழிவை நோக்கி சென்றுகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மலையகத்தின் குறிப்பாக கண்டி, பதுளை, பண்டாரவளை மாவட்டங்களில் இயங்கும் அறநெறி பாடசாலைகளின் சிறப்பான செயற்பாட்டிற்கு பாரிய ஒத்துழைப்பை வழங்குவதுடன். சமய விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவது வரவேற்கத் தக்கதாகும்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு சிறந்த கல்வியே அடித்தளமாக அமையும். சந்நிதியான் ஆச்சிரமம் மற்றும் ஏனைய அமைப்புகளும் இணைந்து பதுளை மாவட்டத்தில் சிறப்பாக கா.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடையும் வறிய மாணவர்களை வைத்தியர்கள், பொறியிய ளாளர்கள் போன்ற உயர் தொழில்களை உருவாக்கும் நோக்கில் அவர்களின் கல்விக்கு பேருதவி செய்து வருவது பதுளை மாவட்டத்திற்கு கிடைத்த பாக்கியமாகும்.

மலையகத்தை பிறப்பிடமாக கொண்ட பல்வேறு அனர்த்தங்களினால் பெற்றோரை இழந்த, ஆதரவு அற்ற குழந்தைகளின் காப்பகமாக இயங்கும் மலையக மகளிர் இல்லக் குழந்தைகளுக்கு தாங்கள் செய்யும் உதவிகள் தொடர இறைவனை பிராத்திக்கின்றேன்.

மலையக சமூகத்தின் வளர்ச்சிக்காக சந்நிதியான் ஆச்சிரமத்தின் பொறுப்பாளர் கௌரவ மோகனதாஸ் சுவாமிகளினதும் அவருடன் இணைந்து செயற்படும் அனைத்து உறுப்பினர் களின் இடைவிடா முயற்சியே ஒருவருட காலமாகத் தொடர்ந்து செயற்பட வழியமைத்து உள்ளது. இவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன், இச்சேவை தொடர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

ஆர். எம். கிருஷ்ணசாமி
*ஸ்தாபக தலைவர்- சமூக உதவி ஸ்தபானம்,*
*தலைவர் - விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ்*
*நிர்வாக தலைவர் - பதுளை நெனசல அறிவகம். பொறுப்பாளர் - மலையக சிறுவர் இல்லம்.*

# வாழ்த்துரை

யாழ்ப்பாணம் சந்நிதியான் ஆச்சிரமம் மலையகத்திற்கு காலடி வைத்து ஒரு வருட பூர்த்தியை கொண்டாடும் இத்தருணத்தில் ஊவா கல்வி மேம்பாட்டு ஒன்றியத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிப்பதில் அகமகிழ்வு கொள்கின்றேன்.

மலையத்தில் பண்டாரவளையை அண்மித்த பிரதேசமான மீரியபெத்தையில் ஏற்பட்ட மண்சரிவை பார்வையிடுவதற்காகவும் அல்லலுறும் உறவுகளுக்காக கரம் கொடுத்து உதவிக்கரம் நீட்டுவதற்காகவும் சந்நிதியான் ஆச்சிரம தலைவரான சுவாமி மோகனதாஸ் அவர்களும் அகில இலங்கை சைவமகா சபையினரும் வருகை தந்து அம்மக்களின் கஸ்டத்தையும் அவலங்களையும் புரிந்து கொண்டு அவர்களுடன் அளவளாவியதன் விளைவாக மலையத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்ற உணர்வும் ஊக்கமும் மோகனதாஸ் சுவாமிகளுக்கும் அவர்களோடு கைகோர்த்து வருகை தந்தவர்களுக்கும் ஏற்பட்டது.

இதன் விளைவாக சுவாமி அவர்களுக்கு மலையத்தில் அதாவது ஊவாவின் பல பிரதேசங்களை பார்வையிட வாய்ப்பு கிடைத்தது. அதுமட்டுமல்லாது கல்வியில் பின்தங்கிய நிலையிலும் வறுமையும், குழு சீவியமும் அடிமை வாழ்வும் வாழ்கின்ற இவ்வுறவுகளுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் இவர்கள் மனதில் ஊசலாட செல்வச்சந்நிதி முருகன் அருளும் கிட்ட சேவையைத் தொடர உறுதி பூண்டனர்.

மோகனதாஸ் சுவாமிகளுடைய தொடர்புகளினூடாக எனக்கு சைவ மகா சபையின் தலைவரான சோதிமூர்த்தி ஐயா அவர்களும் செயலாளரான டாக்டர் நந்தகுமார் அவர்களுடைய தொடர்பும் கிடைத்தது. இதனூடாக மோகனதாஸ் சுவாமி அவர்களும் அறநெறிப் பாடசாலை களுக்கு விஜயம் மேற்கொண்டதுடன், அப்பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும் அங்கு கற்கும் மாணவர்களுக்கும் யாழ்ப்பாணத்தில் கருத்தரங்குகள் சுவாமி கலியுகவரதன் உதவியுடன் மேற்கொண்டார். அதுமட்டுமன்றி அறநெறி ஆசிரியர்களுக்கு உதவித்தொகை, சேலை, சத்துணவு போன்றவற்றையும் வழங்கியதுடன், பசறை பிரதேசத்தில் சில அறநெறிப் பாடசாலைக்கான அறநெறி சீருடைகளையும் வழங்கினார். அதுமட்டுமன்றி நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்ற சில மாணவர்களுக்கும், பல்கலைக் கழகங்களில் கல்வி பயில்கின்ற ஒரு சிலருக்கும் மாதாந்த உதவித் தொகையை தொடர்ச்சி யாக வழங்கிக்கொண்டு வருகின்ற பெரும் புண்ணியத்தினை செய்து கொண்டும் வருகின்றார்.

அதனோடு மட்டுமல்லாது சைவ மகா சபையினரும் யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களும் லண்டன் கிளையுடன் இணைந்து சௌதம் தமிழ் மகா வித்தியாலயம், ரொசட் தமிழ் வித்தியாலயம் போன்ற பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளும் கணித உபகரணப் பெட்டிகளும் வழங்கப்பட்டது. அத்துடன் ரொசட் தமிழ் வித்தியாலய மாணவர்களின் மேடை நிகழ்வுக்காக சுவாமி மோகனதாஸ் அவர்களும் சைவ மகா சபையினரும் மாணவர்களுக்கு பணப் பரிசில்களை வழங்கியது கண்டு அங்கு வந்திருந்த பெற்றோர்களும் ஆசிரியர்களும் மெய் சிலிர்த்தனர்.

இது மட்டுமல்லாது எனது வேண்டுகோளை ஏற்று சைவமகா சபையினர் ஊவாவில் இருந்து 11 மாணவர்களை உள்வாங்கி க.பொ.த (உ/த)தில் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவில் கற்றுக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான உணவு, தங்குமிட வசதிகள்,மேலதிக வகுப்புகள் போன்றவற்றிற்கு முழுச் செலவையும் சந்நிதியான் ஆச்சிரமும், சைவ மகாசபையும் வழங்கிக் கொண்டிருக்கினர். அதுமட்டுமல்லாது நாங்கள் அடிக்கடி

யாழ் சென்றபோதெல்லாம் சைவ மகாசபையினரும் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளும் செய்த விருந்தோம்பலை மறக்கமுடியாது. மனிதர்களை ஒதுக்கிக்கொண்டு இருப்பதை விட மனிதர்களுடன் பழகுகின்றபோதுதான் அவர்களை பற்றி அறிந்தும் புரிந்தும் கொள்ளக்கூடிய வாய்ப்பும் சூழலும் ஏற்படுகின்றது யாழ் சைவமகா சபையினரால் கணித ஆசிரியர்களுக்கான ஒரு வார பயிற்சி நெறி இலவசமாக யாழில் வழங்கப்பட்டது. அதில் பதினைந்து ஆசிரியர்கள் பயிற்சி பெற்றதுடன் தொடர்ந்து இவ்வாறான பயிற்சிகளை எதிர்பார்த்து நிற்கின்றனர். இதற்கான முழு ஒத்துழைப்பையும் சைவ மகாசபையும் சந்நிதியான் ஆச்சிரமமும் மேற்கொண்டது. அத்துடன் க.பொ.த (சா/த)தில் பயிலும் மாணவர்களுக்கு ஐந்து பாடசாலை களில் பல பாடசாலைகளும் இணைத்து யாழ் ஆசிரியர்களின் உதவியுடன் மாணவர்களுக்கு இலவசமாக வினாப்பத்திரங்களும் வழங்கி கருத்தரங்குகளை நடாத்தினர்.

ஊவாவின் தேவைகள் சம்பந்தமாக சில விடயங்களை இங்கு பகிரலாம் என நினைக்கின்றேன். இங்கு கணித, விஞ்ஞானத்தை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. இதனால் கணித விஞ்ஞான கல்வி மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. உயர்வகுப்புகளில் கற்கின்ற மாணவர்கள் ஆசிரியர் பற்றாக்குறையின் காரணமாக வருடம் தோறும் பல்கலைக்கழகம் செல்கின்ற மாணவர்களில் ஒருவர் கூட வைத்தியத்துறைக்கும், பொறியியல் துறைக்கும் சென்றதில்லை. இதன் விளைவாக எமது சமூகம் இன்னும் பல வருடம் பின்தங்கிய நிலைக்கு செல்ல வேண்டியுள்ளது. எனவே இதனை கருத்திற் கொண்டு ஊவா கல்வி மேம்பாட்டு ஒன்றியம் க.பொ.த (சா/த) கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கு பல கருத்தரங்குகளை ஏற்பாடு செய்ய தீர்மானித்துள்ளனர். அத்துடன் எமது சேவை தொடர யாழ் உறவுகளிடம் எங்கள் குறைகளை நிவர்த்தி செய்து தருமாறு வேண்டி நிற்கின்றோம்.

**நிவர்த்தி செய்ய வேண்டிய சில விடயங்கள்**

மாதாந்த கருத்தரங்குகள் ( க.பொ.த) உயர் தர, சாதாரணதர மாணவர்களுக்கானது.
ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள்
வாசிகசாலை நூல்கள்
Duplo Machine பிரதிபண்ணல் இயந்திரம்
உயர் தரத்தில் கணித விஞ்ஞானப் பிரிவில் கல்விபயில விரும்பும் மாணவர்களுக்கு தங்குமிட வசதியும் ஏனைய செலவுகளும்
வசதி குறைந்த மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகள்

மேற்படி உதவிகளை தாங்கள் பிள்ளைகளின் பிறந்த நாளின்போதோ உறவுகளை நினைவு கூறுகின்ற நாளிலோ தங்கள் பெயர் விபரங்களுடன் எமக்கு வழங்குவீரகளாக இருந்தால் அதனை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பயன்படுத்த கூடியதாக இருக்கும். அத்தோடு மாணவர்களின் கருத்தரங்களுக்கு தேவையான உதவிகளையும் செய்வீரகளாக இருந்தால் அதுவும் கல்வி வளர்ச்சிக்குத் துணைபுரியும். அத்துடன் மேலே குறிப்பிடப்படும் தேவைகளை தாங்கள் நிறைவு செய்வீரகளாக இருந்தால் அதுவும் எமது சேவையில் ஒன்றாகும்.

இன்று ஓராண்டு பூர்த்தியினை கொண்டாடும் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளுக்கும் உறவுகளுக்கும் அவர்களின் பணி தொடர மனமார வாழ்த்துகின்றோம்.

கல்விக்கு உயிர் கொடுப்பவன் ஒரு போதும் மரணிப்பது இல்லை.

K. யோகேஸ்வரன் - தலைவர்

தொடர்புகளுக்கு: K. யோகேஸ்வரன் - தலைவர் 072-4333696
S. ராஜா - செயலாளர் 077 -6009502, 075-8889795

# சமன்பிட்டி சாரதாவோடு இணைந்து கரம் நீட்டும் சந்நிதியான் ஆச்சிரமம்

என்னுடைய ஒவ்வொரு மேடைப் பேச்சிலும் மண் வாழும் தாய்க்கும் விண் வாழும் தந்தைக்கும் அன்பான அவைக்கும் என்று கூறியே நான் ஆரம்பிப்பது வழக்கம். இவ்விடத்திலும் என் தாயைத் தெய்வமாக்க எண்ணுகின்றேன்.

"என்னைச் சுமந்து பெற்று இதமாய் அரவணைத்து
தன்னை உருக்கிப் பாலாய்த் தன்வலுவை எனக்கூட்டி
பொன் போலவே போற்றிப் புகழுடனே வாழ வைத்த
அன்னை பதமலரை அனுதினமும் போற்றி செய்வேன்"

என எனது இன்றைய இந்தநிலை வரைக்கும் நிலையான என் தாய்க்கு முதல் மரியாதை செய்வதில் கோடி இன்பம். ஏற்கனவே நான் ஒரு வாசிப்புப் பைத்தியம் என்பதனை ஞானச்சுடர் ஞானம் மூலம் அறிந்திருப்பீர்கள். நான் என்றிருந்த இந்நிலை மாறி நாமாகி இன்று பொலநறுவை மண்ணில் சமன்பிட்டி ஊரையே சிறிது சிறிதாக சமயம் பற்றி புரிந்து கொள்ளவும், தெரிந்து தெளிந்து கொள்ளவும் என்றிவ்வாறு மாற்றி வருவதில் "ஞானச்சுடர்" மலர் பங்கு வகித்தாற்போல் எதுவுமில்லை எனலாம். மேலும் ஞானச்சுடர் மலர் எங்களது தொடர்புக்கு எந்தளவு காரணமாகியது எப்படித் தொடர்பு கொண்டதென ஏலவே பலமுறை வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளேன்.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே"

இத் திருமந்திரப் பாடலூடாக எமது மண் செய்த தவத்தின் விளைவினால் பேராசான் ஸ்ரீலஸ்ரீ மோகனதாஸ் சுவாமிகளின் அருளாசி எம்மை மேலும் ஒரு ஞானகுருவை பெற்றுத் தந்ததுபோல் இருந்தது. 2015ஆம் வருடம் தை மாதம் 01ஆம் திகதியே சந்நிதி வேலவனின் திருவொளி எம்பக்கம் வீச ஆரம்பித்தது. இந்நாள் என்னுடைய வாழ்நாளில் மறக்கமுடியாத பொன்னாள். 18 மாணவர்களுக்கான கற்றல் உபகரணத்தினை திருவாசக விழாவில் சுவாமிகளின் கைகளினால் பெற்றதெல்லாம் உண்மையா இல்லை பிரம்மையா? என்று வினாத்தொடுக்கும் அளவுக்கு நாம் நினைக்காததெல்லாம் நடக்கத் தொடங்கின. இன்று எமது சமன்பிட்டி மண்ணிலே கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற அன்னை ஸ்ரீ சாரதா தேவி அறநெறிப் பாடசாலைக் கட்டிடத்திற்குரிய 110 சீற்களையும் (கூரைத் தகடுகளையும்) தான் தனது வாகனத்தில் ஏற்றி வந்து இறக்கி வைத்ததனை என்னவென்று நான் சொல்ல.

இற்றைவரை சந்நிதியான் ஆச்சிரமத்தினர் எங்களைக் கண்கொண்டு பார்க்க 11 தடவை எமது மண்வந்து சென்றிருக்கின்றார்கள். நாமும் எமது பாடசாலை சார்பாக 07 தடவை சந்நிதியான் ஆச்சிரமம் சென்று தரிசித்த பெரும் பாக்கியத்தை நாம் மறக்கவில்லை. "எல்லாம் அவன் செயல்" என முருகன் சந்நிதி வேலவனையே தன் உடல் உயிர்

உறவாகக் கொள்ளும் சுவாமிகளது சாந்தமான பேச்சும் அமைதியான புன்முறுவலும் நாங்கள் கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்களே என்றாலும் மிகையில்லை.

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த் தண் சுனைகள் இயற்றல்
அன்னச் சத்திரம் ஆயிரம் செய்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

எனும் பாரதியின் பாடலடிகளே எமது அறநெறிக் கூடத்தின் மகுட வாசகம். மேலும் 210 சிறார்கள் எமது பாடசாலையிலே பதிவில் இருந்து கல்வி பயில்கின்றனர். 21 ஆசிரியர்கள் எமது குழந்தைகளுக்குத் தங்களது தன்னலமற்ற சேவையைச் செய்து வருகின்றனர். இது இவ்வாறிருக்க எமது மாணவர்கள் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படுகின்ற சகல போட்டி நிகழ்வுகளிலும் பங்குபற்றி தேசிய ரீதியில் வெற்றிவாகை சூடுவதுதான் எமக்குக் கிடைக்கின்ற பாரிய வெற்றி. 100 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் 01ஆம் இடம் பெற்ற செல்வி நிதுஜா சௌந்தரராஜன் இம்முறையும் வண்ணார்பண்ணை கற்பக விநாயகர் ஆலய சிவநெறிக் கழகம் நடாத்திய சைவ சமய அறிவுப் பரீட்சையில் 99 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் மீண்டும் முதலாமிடம் பெற்று தங்கப்பதக்கம் பெறுகின்ற மாணவியாகத் தேர்வாகியுள்ளார். இவ்விடத்திலே சின்னஞ்சிறு மழலையான தரம் 01இல் கற்கும் மேகலா ரமேஷ்குமாரின் ஒரே மகள் செல்வி லக்ஷியா ரமேஷ்குமார் இவ்வருட தேசிய மட்டக் கட்டுரைப் போட்டியில் 03ஆம் இடம் பெற்று சாதனை படைத்ததையும் பாராட்டியாக வேண்டும்.

ஆகவே 2010ஆம் வருடம் எமது பாடசாலை ஆரம்பம் தொடக்கம் இற்றைவரை எமது சிறார்களது கல்வி வளர்ச்சியில் சந்நிதியான் ஆச்சிரமத்தினரது தொடர்பு எமது சேவையின் தேவையை ஒருபடி உயர்த்தியது என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

மேலும் மலையகப் பார்வை மண்சரிவின் பின்னர் சுவாமிகளது திடீர் விஜயம், உதவும் கரங்கள் என விரிவுபடுத்தப்பட்டுள்ளதோடு ஒரு வருட நிறைவின் பின்னர் பல மாற்றங்களை அவர்களிடையே ஏற்படுத்தியுள்ளது என்பதும் நான் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

பொலநறுவையில் தமிழர்களா? எனும் வினாத் தொடுப்பவர்களே! எமது சேவையின் தேவைகளுக்கு சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளோடு இணைந்து கரங்கொடுப்போம். இவ்வேளையில் மண்ணோடு மாண்ட மனிதம் கொண்ட எம் மக்களுக்கு ஆத்ம சாந்திபெற அனைவரும் வேண்டி நிற்போம்.

"கல்விக் கண் திறக்க கடைக்கண் திறந்தவன்
நெற்றிக் கண் திறந்தவனுக்கு நிகரானவன்"

சைவப்புலவர்
பாலன் சுதாகரன்
*சமன்பிட்டி,*
*பொலநறுவை.*

# நாடிச் சென்றாரை வாழவைக்கும் சந்நிதியான் ஆச்சிரமம்

பாமரனை பண்புள்ளவனாக்குவதும், பண்புள்ளவனை தெய்வீகத் தன்மைக்கு உட்படுத்தி, வாழ்வியலை வாழ்வாங்கு வாழ்வதற்கு வாழ நெறிப்படுத்துகின்ற நிலைக்களங்களாக தொன்றுதொட்ட காலமுதல் இன்றுவரை எம்மவர்களிடையே வலிமையான நம்பிக்கையுடன் பேணப்பட்டும், போற்றப்பட்டும் வருபவை ஆன்மீக ஸ்தாபனங்களே என்பது உலகறிந்த உண்மை.

எக்காலத்திற்கும் பொருத்தப்பாடுடைய உயரிய அறவிழுமியங்களை தன்னகத்தே கொண்டதும், நிதம் நிமிடத்திற்கு நிமிடம் மாறிவரும் விஞ்ஞான உலகம் வியப்புடன் ஈர்க்கும் வல்லமை கொண்டதுமான அதீத சக்தியை கொண்டதே நாம் போற்றும் அர்த்தமுள்ள இந்துமதம்.

ஆதி மூலப்பொருளை நாயகனாகக் கொண்டு அனுதினமும் பின்பற்றிய சமூகத்தினரிடையே ஒரு பிரிவினர், இன்று ஏறக்குறைய 175 வருட காலத்திற்கு முன்னர் "சிவபூமி" என திருமூலரால் பெருமைப்படுத்தி கூறப்பட்ட ஈழத் திருநாட்டின் மகுடம் எனப் போற்றிடும், மலைநாட்டிற்கு ஜீவனோபாயத்திற்காக வந்தேறு குடிகளாகவும், இந்திய வம்சாவழி கூலிப்படைகளாகவும் வந்து, நம் திருநாட்டின் உயர்ந்த பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டு தாழ்ந்த துர்ப்பாக்கிய வாழ்க்கையை சம்சாரம் செய்ய முற்பட்டனர்.

இவ்வாறு வந்தவர்கள் தென்னிந்தியாவிலிருந்து வரும்போது தங்களுக்கு உடைமைகள் என்று கூறுவதற்கு ஒன்றுமே கொண்டுவரவில்லை. ஆயினும் அவர்களால் பரம்பரை பரம்பரையாக பேணப்பட்டு வந்த இந்து கலாசார பண்பாட்டு விழுமியங்களுடன் கூடிய தெய்வ வழிபாட்டையும் நம்பிக்கையையுமே மிகப்பெரிய சொத்தாகக் கொண்டு வந்தனர்.

எனினும் காலம் செய்த கோலத்தினால் அந்நிய நாட்டவரின் மாற்றுமதப் போக்கு, அதிகாரபூர்வமான ஆட்சி, அடக்குமுறையான வாழ்வியல் போன்ற காரணங்களால் இந்து சமய விழுமியங்கள் நிலைகுலைந்து நலிவுற்றது துர்ப்பாக்கியமே.

இதனைப் போக்கும் தூரநோக்கினை அடிப்படையாகக் கொண்டு பலர் எத்தனங்களை மேற்கொண்டு வந்த காலகட்டத்தில் தெய்வாதீனமாக இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டதுடன், நாட்டில் சமயக்கல்வி கட்டாயமாக்கப்பட்டது. இதனை ஆவலுடன் எதிர்கொண்டு ஏற்ற மலையகத்தில் நலிவுற்றுள்ள இந்துசமய நிலையை மீண்டும் தலைநிமிரச் செய்ய முற்பட்டவர்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றமான பெறுபெறுகளே கிடைத்தமை வருந்தத்தக்கதாக இருந்தது. எனினும் நீண்டகால இடைவெளிக்குப் பின் 1977ஆம் ஆண்டிற்குப் பிறகு மலையக மக்களுக்கு இலவசக்கல்வி பெறக்கூடிய வாய்ப்பு கிடைத்தமை குறிப்பிடத்தக்க நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய மிகப்பெரிய உந்துசக்தியாக இருந்தமை பெருமைக்குரிய விடயமாகும்.

இதுவே மலையக இந்து சமூகத்தினர் மத்தியில் ஒரு திருப்புமுனைக்கு அத்திவாரமிட்ட அடிப்படைக் காலமாக இருந்தது. இதனை மிகப்பெரிய திறவுகோலாகக் கொண்டு பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொண்டு சாதனைகள் பலவற்றை புரிந்து எமது கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை கட்டியெழுப்புவதில் முனைப்புடன் பலர் செயலாற்றினர். இதன்மூலம் நலிவுற்ற இந்துசமய நிலைமை மறந்துபோன எமது கலாச்சார பண்பாட்டில் மீண்டும் சீர்பெற்று வளர, நிலைக்களங்களாக நாட்டின் ஆன்மீக ஸ்தாபனங்கள், சமய திணைக்களங்கள், சமய

நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் என்பன அர்ப்பணமிகு பல பணிகளை தூரநோக்கு அடிப்படையில் திட்டமிட்டு நெறிப்படுத்தி வருகின்றமை மிகப்பெரிய எழுச்சிக்கு வித்திட்ட செயற்பாடாக அமைகின்றது.

எனினும் மலையக இந்து சமூகத்தைப் பொருத்தமட்டில் சனாதன தர்மம் எனப் போற்றப்படும் இந்துமதம் உணர்த்திடும் உயரிய உன்னதமான கருத்துக்கள் அவர்களை அண்மிக்கவில்லையே என்ற தாகம் ஏற்பட்டு ஏங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில், ஈழநாட்டில் வடபகுதியில் திருவருள் நிறைந்த அன்னதானக் கந்தனின் திருப்பாதத்திலிருந்து அளப்பரிய சமூக, ஆன்மீகப் பணியாற்றி சமய எழுச்சியையும், தெய்வீக நம்பிக்கையையும் ஏற்படுத்தி வருகின்ற யாழ்ப்பாணம், தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி மோகனதாஸ் அவர்களும் அவரது குழுவினரின் வருகையும் மிகப்பெரிய ஆன்மீக சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தியமை பெருமைக்குரியதும், மகிழ்ச்சிக்குரியதும், மன நிறைவிற்கும் உரியதாகும். இவர்களோடு கரம்கோர்த்த யாழ் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம், மற்றும் யாழ் சைவ மகா சபையினரின் வருகையும் மலையகத்தின் பதுளை மாவட்ட மக்களின் அறநெறி, ஆன்மீகச் சிந்தனைத் தூண்டலுக்கு அடித்தளமாக அமைகின்றது.

இன்று ஓராண்டு காலத்திற்கு முன்னர் இயற்கை கொண்ட சீற்றத்தின் காரணமாக பதுளை மாவட்டத்தில் கொஸ்லந்தை மீரியப்பெத்தை பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக உயிர்கள், உடைமைகள் காவுகொண்ட சோகத்தை முழு உலகமும் அனுபவித்தது.

இச்சோகத்தில் பங்கெடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு கைகொடுக்கும் நோக்குடனும் வருகை தந்த யாழ் சந்நிதியான் ஆச்சிரமத்தின் சுவாமிகள் உட்பட்ட குழுவினர்கள் மலையகத்தினதும், பதுளை வாழ் இந்து மக்களினதும் நிலையுணர்ந்து அவர்களுக்கு உதவும் வகையிலும், மலையக மக்களுக்கும் வடபகுதி ஆன்மீக சமூக நிறுவனங்களுக்குமிடையில் உறவுப்பாலம் அமைக்கும் வகையிலும் மாதாந்த விஜயங்களை மேற்கொண்டு, ஆன்மீக சொற்பொழிவுகளை செய்தும், அறநெறிப் பாடசாலை மற்றும் பாடசாலைகளுக்கும் உதவிகளை பொருளாகவும், பணமாகவும் வழங்கியும், ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை வழங்கியும், கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மாணவர்களுக்கு உதவிகளைச் செய்தும் வருகின்றமை மிக உயர்ந்த சேவையாகவும் தொண்டாகவும் நான் கருதுகிறேன்.

சந்நிதியான் ஆச்சிரமம் என்றால், நாடிச் சென்றால் வாழ வைக்கின்ற பெருமைக்குரிய ஒரு ஸ்தாபனம். அதன் தலைமைப் பொறுப்பை ஏற்று நடாத்துகின்ற மதிப்புக்குரிய ஸ்ரீமத் சுவாமி மோகனதாஸ் அவர்களின் அர்ப்பணமிகு சேவைக்கு நிகர் யாருமில்லை என்றே கூறலாம். இவர்களின் வருகையால் இன்று பதுளை மாவட்டத்தில் பல அறநெறிப் பாடசாலைகள் உதவிகளைப் பெற்று மிகவும் துடிப்பாகச் செயற்படுகின்றன.

நல்ல பண்பும் மனித நேயமும் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்க இவ்வாச்சிரமத்தின் செயற்பாடுகள் வித்திடுகின்றது. விருந்தோம்பலுக்குப் பிரசித்தி பெற்ற சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு ஒப்பான நிறுவனம் இல்லை என்பது நான் அறிந்த உண்மை. இவ் ஆச்சிரம பணிகள் எமது சமூகத்திற்கு பரவலாக கிடைக்கப்பெற்றால் ஆன்மீக சமூக வாழ்வியலில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பது எனது அசையா நம்பிக்கையாகும். நாம் இவர்களுடன் இணைந்து செயற்படத் தயாராக வேண்டும்.

பணிவளர சந்நிதியான் தாள் வணங்குகின்றேன்.

திருமதி பிரகாஷ் விஜயகுமாரி
ஆசிரியை, ப/ கோணமுட்டாவ த.வி.
அப்புத்தளை.

**கலாபூஷணம்**

**கீழ்க்கரவை கி. குலசேகரன் அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துப் பா

வேல் வடிவில் சந்நிதியில் வீற்றிருந்து;
வேண்டும் அடியார்கள் குறை தீர்த்து வைக்கும்;
மால்மருகன்; முருகன், சண்முகனின் அந்த
மனம் கவரும் பதி நாடி வருவோர்க்கெல்லாம்;
நாள் முழுதும் சேவை செய்யும் நிலையம்; என்றும்
நாம் போற்றும் சந்நிதியான் ஆச்சிரமம்!
நீள் புகழே கொண்ட நற்சேவையாலே;
நெஞ்சங்களை நிதமும் கொள்ளை கொள்ளும்!

ஆன்மீகப் பணியோடு மட்டுமல்லாதிங்கு;
அன்னப்பணி; கல்விப்பணியோடு; மற்றும்;
மேன்மை மிகும் வைத்திய நற்பணியும் செய்யும்
மேலான ஆச்சிரமம் ஆகக் கண்டோம்!
கூன்; குருடு; செவிடானவர்கள் கூட; தங்கள்
குறை தீர்க்க ஆச்சிரமம் நாடக் கண்டோம்!
வேண்டுகின்ற உதவிகளைப் பெற்றே ஆங்கு;
வேலவனின் புகழ்பாடிப் பணியக் கண்டோம்!

நாயன்மார் அறுபத்து மூவருக்கு; வெள்ளிதொறும்;
நயமாக அமுதினையே படைக்குமக் காட்சிதனை;
போயனைவரும் பார்ப்பீர்! புதுமை அன்றோ?
பொறுமை; புரிந்துணர்வுடனே என்றும் மிக்க;
நேயமுடன் அளப்பரிய சேவை செய்து;
நெஞ்சங்கள் கொள்ளை கொள்ளும் ஊழியர்களை;
தூயபணி செய்யும் எங்கள் மோகனதாஸ் சுவாமிகளின்
தொண்டுகளைத் தினந்தினமும் வந்தே பாரீர்!

வெள்ளிதொறும் ஆச்சிரம மண்டபத்தினை நோக்கி
விரைந்து வந்து கூடிடுமே பக்தர் கூட்டம்!
தெள்ளு தமிழில் சமய உரைகள் ஆற்ற ஆங்கு;
திட்டமிட்டபடி வருமே கற்றோர் கூட்டம்!

உள்ளத்தை உருக்கும் நல் இசையை மீட்ட;
உளமகிழ்ந்து வந்திடுமே கலைஞர் கூட்டம்! பக்தி
வெள்ளத்தில் நீந்திடலாம் ஆச்சிரமத்தில்! எங்கள்
வேலன் புகழ் பாடிடும் அத் திருத்தலத்தில்!

மாதங்கள் தோறும் வெளிவருமே எங்கள்
மனங்கவரும் "ஞானச்சுடர்" சஞ்சிகைதான்! நல்ல
போதங்கள் தாங்கிவரும் மலரால் நல்ல
புத்தறிவு பெறுபவர்கள் பலபேர் என்போம்!
வேத நெறி தழைத்தோங்க ஆச்சிரமம் ஆற்றுகின்ற
வியப்புமிகும் பணிகளுக்கு ஈடே இல்லை!
ஆதலினால் ஆச்சிரம சேவையது தொடர்ந்திடவே
ஆறுமுகன் அருளினை நாம் வேண்டுகின்றோம்!

"எல்லோர்க்கும் சேவை" என்ற எண்ணம் கொண்டு
எங்கள் மலையகத்தில் உள்ளோருக்கும்;
பல்வேறு வழிகளிலே உதவி செய்ய; அவர்கள்
பயன்பெற்று அறவழியில் உயர்ந்தே நிற்க;
நல்வழிகள் வகுத்து நிற்கும் ஆச்சிரமம்; பொது
நலன்களுக்காய் உழைக்கின்ற ஆச்சிரமம்;
பல்லாண்டு காலங்கள் வாழ்கவென்றே மிக்க
பக்தியோடு வாழ்த்துகிறோம்! நீடு வாழி!

*கலாபூஷணம்*
**கீழ்கரவை கி. குலசேகரன்**
*அப்புத்தளை.*

# மீரியப்பெத்தை மண்சரிவும் தாக்கமும் – அதன் எதிரொலியும்

**01.11.2014 சனிக்கிழமை:**

மாலை 5 மணியளவில் யாழ் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்கள் எம்முடன் தொலைபேசியூடாக தொடர்புகொண்டு, 02.11.2014 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணியளவில் "நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பதுளை மீரியப் பெத்தை மண்சரிவின்மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர் அஞ்சலி நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளோம். நீங்களும் அந்நிகழ்வில் கலந்து பஜனை வழிபாடுகளில் ஈடுபடவேண்டும்" என்ற கோரிக்கையை முன் வைத்தார். அந்த நிகழ்வுக்கான நேரம் மாலைப் பொழுதாக இருந்த காரணத்தால் நாமும் நல்லை ஆதீனம் சென்று அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றினோம். அந்நிகழ்வு இரவு 7 மணிவரை நீடித்தது. அதனைத் தொடர்ந்து, "இவ்விடயம் சம்பந்தமாக ஒரு கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்துள்ளோம். அதில் உங்களையும் இணைத்துள்ளோம்" என்று கூறியதன் பிரகாரம் அக் கருத்தரங்கில் பங்குபற்றினோம்.

மண் சரிவு சம்பந்தமாகவும் நாட்டில் இடம்பெறும் பல விடயங்கள் பற்றியும் அக் கலந்துரையாடலில் பேசப்பட்டது. இவ்விடயம் சம்பந்தமாக மாதம் ஒருமுறை நாம் அனைவரும் ஒன்றுகூடி ஆலோசித்து அதற்குரிய வழிவகைகளைச் செய்யவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார்கள். ஆனாலும் இக் கருத்தை என் மனது ஏற்கவில்லை. மாதம் ஒருமுறை கூடுவதை விடுத்து, இரு வாரங்களுக்கு ஒருமுறை நாம் அனைவரும் ஒன்று கூடினால் நல்லது என்ற எனது எண்ணத்தைத் தெரிவித்த பின்னர் இரவு 8.30 மணியளவில் ஆச்சிரமம் திரும்பினோம்.

ஆனாலும் ஆச்சிரமம் திரும்பியதும், "உடனடியாகவே சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு எம்மால் இயலுமான உதவிகளை வழங்க வேண்டும்" எனும் எண்ணம் என் மனதில் உதயமாகியது. அதற்குப் பின்பு கூடி ஆராயவேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது. அந்த நிலைப்பாட்டை செயலாற்றும் வண்ணம் ஜாக்ரத சைதன்யா அவர்களோடு தொலைபேசியினூடாக, "கூட்டம் கூடுவதைப் பிறகு பார்ப்போம். நாம் அனைவரும் பாதிக்கப்பட்ட இடத்திற்கு நேரில் போய் அம்மக்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்யவேண்டும். அதனடிப்படையில் எமது பேருந்தில் நாம் போகப்போகின்றோம். வர வசதியுள்ளவர்கள் எம்மோடு இணையலாம்" என்று கூறியதற்கு சைதன்யா சுவாமிகள், "மிகவும் நல்லது. நான் சைவ மகா சபையினரோடும் இவ்விடயம் பற்றி கலந்துரையாடி முடிவு தெரிவிப்பதற்கு இரண்டு நாள் அவகாசம் தரும்படி" கோரியிருந்தார்.

மறுநாள் காலை சைதன்யா சுவாமிகள் எம்மோடு தொடர்பினை ஏற்படுத்தி சைவ மகாசபையைச் சேர்ந்த மருத்துவர் நந்தகுமார் அவர்கள் இவ்விடயம் சம்பந்தமாக உங்களோடு தொடர்பு கொள்வார் என்று கூறினார். 05.11.2014 புதன்கிழமை காலை மருத்துவர் நந்தகுமார்

அவர்கள் தொலைபேசியினூடாக தொடர்பினை ஏற்படுத்தி "எம்மோடு தாங்களும் இணைந்து கொள்வதாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்காகச் சேகரிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் இருப்பதாகவும் அதோடு மட்டுமல்லாமல் வவுனியாவைச் சேர்ந்த சிவதொண்டர் அமைப்பினாலும் சேர்க்கப்பட்ட பொருட்கள் வவுனியாவில் இருப்பதாகவும் அதனையும் கொண்டு போவோம்" என்றும் கூறினார். அதற்கிணங்க 07.11.2014 வெள்ளிக்கிழமை இரவு எமது பயணத்தை ஆரம்பிக்கும் முகமாக அச்செயற்பாட்டில் நாம் அனைவரும் ஈடுபட்டோம்.

### 07.11.2014 வெள்ளிக்கிழமை - முதலாவது மலையகப் பயணம்:

பிற்பகல் 3 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து புறப்பட்ட பேருந்து கொக்குவிலில் அமைந்துள்ள சைவ மகா சபைக் காரியாலயத்திற்குச் சென்று அங்கேயுள்ள பொருட்களையும் மலையகத்திற்கு வருதை தர இருந்த மருத்துவர் நந்தகுமார் உட்பட சைவ மகா சபை உறுப்பினர்களையும் ஏற்றிக்கொண்டு திரும்பிய பேருந்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இருந்த அன்பர்களையும் ஏற்றிக்கொண்டு எமது மலையகப் பயணம் ஆரம்பமாயிற்று. இடையில் வவுனியாவில் சிவதொண்டர் அமைப்பைச் சேர்ந்தோரையும் அவர்களால் சேர்க்கப்பட்ட பொருட்களையும் ஏற்றிக்கொண்டு இரவு 11மணி அளவில் கோவில் குளம் சிவன் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தை அடைந்தோம். அங்கே சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனத் தலைவர் சுவாமி கலியுகவரதன் அவர்களது ஏற்பாட்டில் இரவு உணவருந்தியதுடன், இரவுப் பொழுதையும் அங்கேயே கழிக்கும்படி ஆயிற்று. மறுநாட் காலை கலியுகவரதனால் சேர்க்கப்பட்ட பொருட்களோடு அவர்களும் நமது பயணத்தில் இணைந்து கொண்டார்கள்.

### 08.11.2014 சனிக்கிழமை:

அதிகாலை 5 மணியளவில் சுமார் 30 பேருடனும் பொருட்களோடும் புறப்பட்ட பேருந்து பிற்பகல் 3 மணி அளவில் பதுளை நகரில் நடுநாயகமாக வீற்றிருக்கும் கதிரேசன் ஆலயத்தை அடைந்தது. சைவ மகாசபையினர் கதிரேசன் ஆலயத்தில் எமக்குரிய மதிய உணவை ஏற்பாடு செய்திருந்தார்கள். நமது பிரயாணத்திற்கு முன்னோடியாக அம்பாறை சைவநெறிக்கூட அன்பர்கள் எமக்கு முன்பே பதுளைக்கு வருகை புரிந்து நாம் போகவேண்டிய இடங்களின் விபரங்களையும் அதற்குரிய ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தார்கள்.

சைவ மகா சபையின் ஒரு அங்கமாகச் செயற்படும் சைவநெறிக்கூட அமைப்பைச் சார்ந்த நால்வர் திரு க. கணேசன் தலைமையில் இரண்டு மோட்டார் சைக்கிள்களுடன், சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நம்மை அழைத்துச் செல்வதற்கான முன் ஆயத்தங்களோடு அம்பாறையிலிருந்து வந்திருந்தமை கண்டு நாம் வியப்புற்றோம். இந்த முன்னேற்பாடு நம் மனதைத் தொட்டதுடன் நமக்குப் பெரும் ஆறுதலாகவும் இருந்தது. இவர்களோடு மலையகச் மகளிர் இல்லப் பொறுப்பாளர் திரு ம. கிருஸ்ணமூர்த்தி அவர்களும் இணைந்திருந்தது எமது பணிகளுக்கெல்லாம் உந்துசக்தியாக இருந்தது என்றே கூறவேண்டும். ஏனெனில் எமது குழுவினர் அனைவருக்கும் பரிச்சயமில்லாத பிரயாணம். ஒருவரை ஒருவர் முன்பின் தெரியாத இடம் அவர்களது வருகையால் இப்பயணம் மிகவும் சுமூகமாக இடம்பெற்றது என்றே கூறவேண்டும்.

ஒரு வழியாக மாலை நான்கு மணியளவில் பதுளை கதிரேசன் ஆலயத்திலிருந்து எமது குழுவினர் புறப்பட்டனர். எமது பிரயாணம் ஆரம்பமாகும்பொழுது மழையும் தூறத் தொடங்கியது. நாம் பதுளையிலிருந்து பண்டாரவளையை அடைந்தோம். அங்கிருந்துதான் தொடங்கியது எமது பிரயாணத்திற்குத் தடை. பூனாகலை தமிழ் வித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்களை ஒருவரும் நேரில் பார்க்க இயலாதென்றும் நாம் கொண்டுபோகும் பொருட்கள் எவையாயினும் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது என்றும் பூனாகலை செல்லும் பாதையில் நின்றிருந்த காவல்துறையினர் கூறி எம்மைத் திருப்பி அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனாலும் மருத்துவர் நந்தகுமாரின் சொல்லாடலும் எம்மோடு வந்தவர்களையும் எடைபோட்ட காவல்துறையினர் அரை மனதுடன் தடையை நீக்கி எம்மைப் போகவிட்டனர்.

நேரமோ 5.30ஐ அண்மித்துவிட்டது. ஒருவழியாக பூனாகலை தமிழ் வித்தியாலயத்தை அடைந்தோம். பாடசாலைக்குச் சமீபமாக எமது பேருந்தைக் கொண்டு செல்ல முடியாது என்று அங்கே நின்றவர்கள் கூறியதற்கிணங்க நாம் அனைவரும் இறங்கி நடந்து செல்லத் தீர்மானித்தோம். சிறிய பைகளில் கொண்டுபோகும் பொருட்களைத்தான் உள்ளே அனுமதிப்பார்கள் என்று அங்கே நின்ற பொதுமக்கள் கூறியதால் நாம் கொண்டு போன பொருட்களை சிறு சிறு சொப்பிங் பைகளில் போட்டு ஆளுக்கு இரண்டாக எடுத்துக்கொண்டு பேருந்தைவிட்டு இறங்கி முன் பின்னாக நடந்து போய்க்கொண்டிருந்தோம்.

பாடசாலையின் முன் வாயிலை நெருங்கும் சமயம் ஒரு வாகனம் உள்ளிருந்து வெளியே வந்தது. அவ்வாகனம் எம்மை அண்மித்ததும் வாகனத்தில் வந்த சுகாதார வைத்திய அதிகாரியாகவும், அந்த முகாமுக்கு பொறுப்பாக உள்ள பெண்மணியும் அவருடன் வந்த உதவியாளரும் வாகனத்தை நிறுத்தி எம்மிடம் தமது விசாரணையை ஆரம்பித்தார்கள். நாமும் வந்த காரணத்தையும் பாடசாலையில் தங்கியுள்ள மக்களை நேரில் சந்தித்து நாம் கொண்டு வந்த பொருட்களைக் கையளிக்க வேண்டும் என்னும் கோரிக்கையையும் முன் வைத்தோம். நமது கோரிக்கைக்கு இணங்க முடியாது என்ற முறையில் அவர்களது பதில் அமைந்திருந்தது. ஆனாலும் மருத்துவர் நந்தகுமாரும் இலங்கை வங்கி ஊழியர் திரு த. கணேசமூர்த்தி மற்றும் சுவாமி கலியுகவரதன் ஆகியோர் தமது எண்ணத்தை வலியுறுத்தி அவர்களது சம்மதத்தைப் பெறுவதற்கு முயற்சித்தார்கள். நாமும் எமது பங்கிற்கு அங்கே தங்கியுள்ள மக்களுக்கு கொடுக்கவந்த வடைப் பார்சலையும் கடலைமாப் பைக்கற்றுக்களையும் அவர்களுக்குக் காட்டி அவர்கள் இருவரின் கையிலும் ஒவ்வொரு பார்சலையும் கொடுத்து ஒரு வழியாக அவர்களை இணங்க வைத்தோம். இருந்தும் எம்மை உள்ளே அனுமதிக்காது நாம் கையில் கொண்டு வந்த பொருட்களை உள்ளே எடுக்குமாறு தனக்குக் கீழ் பணியாற்றும் ஊழியர்களுக்கு கூறிவிட்டு வாகனத்தில் சென்று விட்டார்.

வட பகுதியில் இடம்பெற்ற யுத்த சூழலின்போது நாம் கையில் கொண்டுபோகும் பொருட்களை எப்படி இராணுவம் பார்த்ததோ அதேபோன்றுதான் அங்கேயும் இடம்பெற்றது. அதன் பிரகாரம் நாம் வாசலை அண்மித்து சிறிய கேற்றின் வழியாக உள்ளே நுழைய எமது குழுவினர் ஆயத்தமாக ஒருவர் பின் ஒருவராக நின்றனர். வெளியில் இருந்து வரும் தின்பண்டங்களோ; உணவுப் பொதிகளோ உள்ளே எடுக்க முடியாது என்றும் அதனைப் பரிசோதித்த பின்பே உள்ளே எடுக்க முடியும் என்று பொருட்களை பரிசோதித்தவர்கள்

கூறியதன் பிரகாரம், "இந்தாருங்கள் சாப்பிட்டுப் பாருங்கள்" என்று கூறி அவர்களுக்கும் கொடுத்ததன் பிரகாரம் ஒவ்வொருவராக ஒரு சிலரை உள்ளே விட்டனர். எம்மோடு வந்தவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் வெளியில் உள் நுழைவதற்கு ஒருவர் பின் ஒருவராக நின்றிருந்தோம். ஆனாலும் என் மனதுக்குள் ஒரு போராட்டம். யாரோடு என்று கேட்கின்றீர்களா? நான் வணங்கும் முருகனோடுதான். இவ்வளவு தூரம் வந்தும் எமது எண்ணம் நிறைவேற முடியாமலுள்ளதே. அதேபோன்று நாம் கொடுக்க என்று கொண்டு வந்த பொருட்களில் பெரும்பகுதி பேருந்தில் இருக்கின்றதே. அப்பொருட்களை பாதிக்கப்பட்ட வர்கள் கையில் கொடுக்க முடியவில்லையே ஏன் இந்த சோதனை. உன்னை நம்பித்தானே இப்பயணத்தில் ஈடுபட்டேன் என மனவேதனையுடன் வரிசையில் நின்றவர்களுள் ஒருவராக வெளியில் நின்றிருந்தேன்.

அப்போதுதான் நாம் எதிர்பாராத அந்த சம்பவம் இடம்பெற்றது. வரிசையின் முன்னால் நின்ற திரு ஆ. அருணாசலம் இன்னும் ஒரு சிலரும் பொருட்களைப் பரிசோதிக்கும் இடத்தில் நின்றபொழுது அந்த மக்களின் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரி அவ்விடத்திற்கு வருகை புரிந்து முன்னால் நின்ற அருணாசலத்திடம் "எங்கேயிருந்து வருகின்றீர்கள்?" என்று கேட்டதற்கு திரு அருணாசலம் "நாம் அனைவரும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியிலுள்ள சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து வந்திருக்கிறோம்" என்று பதிலுரைத்தார். "சுவாமி வந்திருக்கின்றார்களா? என்று இராணுவ அதிகாரி கேட்டதும் அங்கே நின்ற அனைவரும் ஆச்சரியப்பட்டு சுவாமிகளும் வந்து வெளியில் நிற்கின்றார் என்று கூறியதுதான் தாமதம் "உடனே அவரை உள்ளே அழைத்து வாருங்கள்" என்று கூறியதோடு வாயிலுக்கு அருகில் வந்து என்னை வரவேற்றார்கள். ஆனால் எனக்கோ ஒரே ஆச்சரியம். அந்த அதிகாரியை நான் சந்தித்த ஞாபகம் இல்லை. ஆனாலும் ஆச்சிரமத்திற்கு பல சந்தர்ப் பங்களில் இராணுவத்தைச் சேர்ந்தோர் வருவதுண்டு. அவர்களில் ஒருவராகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவரை அணுகினேன்.

அச் சமயம் அவ் அதிகாரி தான் பருத்தித்துறையில் கடமை புரிந்த சமயம் சந்நிதி ஆலயத்துக்கு வந்த சந்தர்ப்பங்களில் ஆச்சிரமத்துக்கும் வந்ததாகக் கூறி எமது குழுவினரை உடனடியாக எவ்வித பரிசோதனையுமின்றி உள்ளே விடுமாறு காவலுக்கு நின்ற இராணுவ வீரர்களுக்கு உத்தரவிட்டதன் பிரகாரம் எமது குழுவினர் அனைவரும் தாம் கையில் கொண்டு வந்த பொருட்களோடு உள்ளே வந்தனர். எம் குழுவினரையும் அவர்கள் கையில் வைத்திருந்த பொருட்கள் அடங்கிய பைகளையும் பார்த்துவிட்டு அருகில் பாதுகாப்புக்கு நின்ற இராணுவ வீரரை அழைத்து இவர்கள் கொண்டு வந்த பொருட்களைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுப்பதற்கு உதவிபுரியும்படி கூறியதுடன் தனக்கு ஓர் கருத்தரங்கு இருப்பதாகக் கூறி உள்ளே செல்ல முற்பட்டார். நான் அவரை நிறுத்தி, "நாம் வழங்குவதற்காகக் கொண்டுவந்த பொருட்களில் பெருமளவு நாம் வந்த பேருந்தில் இருக்கின்றது. அவற்றையும் உள்ளே கொண்டுவந்து கொடுப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டேன். அவரது சம்மதம் கிடைத்ததும் நான் அவருக்கு நன்றிகூறி விடை கொடுத்தேன்.

பின்னர், நாம் கொண்டுபோன பொருட்களில் தேவையானவற்றை எடுத்து வந்து அங்கே உள்ள மக்கள் எல்லோருக்கும் திருப்தியான முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அத்துடன் சுமார் 1 மணித்தியாலத்திற்குமேல் அங்கே உள்ளவர்களோடு எமது குழுவினர் அளவளாவியபொழுது தங்களை ஒருவரும் வந்து பார்க்கவில்லையே என்ற ஆதங்கத்தைத் தெரியப்படுத்தி யாழ்ப்பாணத்தில் இருந்து எம்மைத் தேடி வந்ததையிட்டு உணர்வுபூர்வமாக தங்களது நன்றியறிதலைத் தெரிவித்து கண்ணீர் மல்க நின்றார்கள்.

அவர்கள் அனைவருக்கும் சுவாமி கலியுகவரதன், மருத்துவர் நந்தகுமார் மற்றும் எம்மோடு வந்த கவிமணி அன்னைதாசன் போன்றோர் “உங்களது சுக துக்கங்களில் பங்குபற்ற நாம் இருக்கின்றோம்” எனும் நம்பிக்கையை ஊட்டி இரவு 8.30 மணியளவில் பாடசாலையைவிட்டு வெளியேறினோம். அம் மக்களும் வாயில்வரை எம்மோடு வந்து வழி அனுப்பினார்கள். நாம் புறப்படும் சமயம் எம்மோடு நின்ற இராணுவ வீரருக்கும் நன்றி கூறிவிட்டு வெளியில் வந்து எமது பேருந்தை நோக்கி நடந்து கொண்டிருந்தோம். அப்போது ஒரு இராணுவ வாகனத்தில் அதே இராணுவ அதிகாரி தமது இருப்பிடத்திற்குச் செல்வதற்கு வந்தவர் வழியில் தமது வாகனத்தை நிறுத்தி, “உங்கள் பணி முடிந்து விட்டதா?” என்று கேட்டபொழுது எனக்கு நான் வணங்கும் முருகனாகவே அவர் காட்சி தந்தார். ஏனெனில் எமது செயற்பாடு எவ்வித தடங்கலுமின்றி நடைபெற்றதற்கு அந்த அதிகாரி ரூபத்தில் முருகன்தான் வந்திருக்க வேண்டும். எமது குழுவினர் அனைவரும் அந்த அதிகாரிக்கு மீண்டும் நன்றிகூறி அவரிடமிருந்து விடைபெற்றோம்.

அதனைத் தொடர்ந்து அப்புத்தளைப் பிரதேசத்தில் அமைந்த கோணமுட்டாவ எனும் தோட்டப் பகுதியை இரவு 10 மணியளவில் அடைந்தோம். நாம் அனைவரும் தங்குவதற்கு இரண்டு வீட்டை ஒழுங்குபடுத்தியதோடு இரவு உணவையும் வழங்குவதற்கு சைவ மகா சபையின் மலையகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். எமது குழுவினர் இரு பகுதிகளாகப் பிரிந்து இரு வீட்டிலும் தங்கி அன்றிரவைக் கழித்தோம்.

### 09.11.2014 ஞாயிற்றுக்கிழமை:

அன்று காலை எழுந்து காலைக் கடன்களை முடித்து நாம் இருந்த வீட்டில் அவர்களின் கோரிக்கையின் நிமித்தம் திரு அன்னைதாசனின் கூட்டு வழிபாட்டில் நாம் அனைவரும் ஈடுபட்டபின்னர் காலை உணவையும் முடித்துக்கொண்டு அவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்த பின்னர் பேருந்தில் பயணம் தொடர்ந்தது. பேருந்தில் நமது பகல் நேரப் பயணம் “இந்தப் பாதையூடாகவா இரவு வந்திருந்தோம்” என்று நாமனைவரையும் ஆச்சரியப்படவைத்தது. ஏனெனில் பாதையோ மிகக் குறுகியது. கரணம் தப்பினால் மரணம்தான் அதில் எவ்வித ஐயமுமில்லை. சிறிய வாகனமே போவதற்கு இடைஞ்சலாக உள்ள பாதையில் எமது பேருந்து போய் வந்ததை எண்ணும்போது சாரதியின் அனுபவமும் இறைவனின் அனுக்கிரகமுமே நம்மைக் காத்து நின்றது என்றுதான் சொல்ல வேண்டும். இத்தன்மை வாய்ந்த பாதைகள் வழியேதான் நாம் போகவேண்டும் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை. எம்மூர் வீதிகளைப் போலத்தான் இருக்கும் என்றுதான் நாம் அனைவரும் நினைத்திருந்தோம். எமது சாரதி மலைநாடுகளில் வாகனங்கள் செலுத்துவதில் அனுபவம் வாய்ந்தவராதலின் பல இடங்களுக்கும் சென்றுவர உதவியாக இருந்தது.

முற்பகல் 10 மணியளவில் மண்சரிவு அபாயம் காரணமாக காகல் தோட்டத்திலுள்ள பொதுநோக்கு மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களைச் சந்தித்து அவர்கள் மனநிலை மாற்றத்திற்காக பஜனை வழிபாட்டில் நாம் அனைவரும் ஈடுபட்டோம். எம்மோடு மண்டபத்தில் உள்ள மக்களும் மதபேதமின்றி பஜனை நிகழ்வில் ஈடுபட்டனர். உண்மையில் அப் பிரார்த் தனையின் மகத்துவத்தை பிரார்த்தனை முற்றுப்பெற்ற பின் அம்மக்கள் கூறிய கருத்தின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. அதனைத் தொடர்ந்து அங்கே இருந்த மக்களுக்கும் எமது குழுவினர் தாம் கொண்டுபோன பொருட்களைக் கையளித்ததோடு அங்கே உள்ள சிறார்களுக்கென வழங்குவதற்குக் கொண்டுவந்த சைவ மகா சபையின் தயாரிப்பான சமபோஷா பைக்கற்றுக்களும் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பண்டாரவளை அயிஸ்லெபி தமிழ் வித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்களைச் சந்திக்க வேண்டும் என்ற முனைப்புடன் எமது பிரயாணம் தொடர்ந்தது.

பிற்பகல் 2.30 மணியளவில் அயிஸ்லெபி தமிழ் வித்தியாலயத்தை அடைந்தோம். அங்கேயுள்ள அப்பகுதி மக்களைச் சந்தித்து அவர்களோடு அளவளாவி ஆறுதல் வார்த்தைகள் கூறி அங்கேயுள்ள மைதானத்தில் மண் சரிவில் இறந்த மக்களுக்குரிய அஞ்சலி நிகழ்வு ஒன்றை செய்யும் வண்ணம் 105 சிட்டி விளக்கு ஏற்றப்பட்டு நாமும் பாதிக்கப்பட்ட மக்களுமாக ஓர் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வினை நடாத்தி முடித்தோம். அந்நிகழ்வினூடாக மானுட மேம்பாட்டு நிறுவனர் சுவாமி கலியுகவரதன், சைவ மகா சபைச் செயலாளர் மருத்துவர் நந்தகுமார், கவிமணி அன்னைதாசன் போன்றோர் உரை நிகழ்த்தியதன்மூலம் அந்த அஞ்சலி நிகழ்வு ஒரு காத்திரமான செயற்பாடாக அமைந்திருந்தது. பின் நாம் அவர்களுக்கும் பொருட்களைக் கையளித்துவிட்டு மாலை 5 மணியளவில் பதுளை நகரில் அமைந்துள்ள மகளிர் இல்லத்தை நாடிச் சென்றோம். அவ் இல்லத்துக்குப் பொறுப்பாக இருந்த திரு கிருஷ்ணசாமி அவர்கள் எமது குழுவை வரவேற்று சிற்றுண்டி வகைகளை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து அங்கேயுள்ள பெண் பிள்ளைகளையெல்லாம் ஒன்று சேர்த்து நாமும் அவர்களுமாக கூட்டு வழிபாட்டில் ஈடுபட்டோம். அத்துடன் நாம் கொண்டுபோன பொருட்களின் மீதியை இல்லத் தலைவரிடம் கையளித்ததன்பேரில் கணவரெல்ல மேல்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு திரு கிருஷ்ணசாமி நேரில் சென்று வழங்கியிருந்தார். எல்லோரிடமும் விடைபெற்று இரவு 8 மணியளவில் செல்வச்சந்நிதியை நோக்கி எமது பிரயாணம் ஆரம்ப மாயிற்று.

பதுளையிலிருந்து பேருந்தில் வரும்போதே எமது குழுவினர் தாம் செய்த செயற்பாட்டின் தன்மையின் பலாபலன்களை அலசி ஆராய்ந்து மாதம் ஒரு தடவை இரண்டு நாள் மலைய கத்தில் எமது சேவையைச் செய்வதற்கும் அதற்குத் தேவையான உதவிப் பொருட்களோடு செல்வதாகவும் ஒரு உறுதிப்பாட்டை எடுத்திருந்தோம். அச்செயற்பாட்டை இன்றுவரை நடாத்தி வருகின்றோம். இவை அனைத்திற்கும் மூலகாரணமாக விளங்கும் சந்நிதி வேற்பெருமானை வணங்கி முதல் பயணத்தை நிறைவு செய்து 10ஆம் திகதி காலை ஆச்சிரமத்தை எமது பேருந்து வந்தடைந்தது.




பூனாகலை சுகாதார வைத்திய அதிகாரியுடன் மருத்துவர் நந்தகுமார்




Maskeliya Plantations PLC
Managing Agents:
A RICHARD PIERIS COMPANY
RPC Management Services Pvt Limited





நிவாரணப் பொருட்களுடன்
எமது குழுவினர்





நிவாரணப் பொருட்கள் கையளிக்கும் நிகழ்வு.





நிவாரணம் வழங்கும் செயற்பாடு.







பண்டாரவளை – அயிஸ்லெபி
பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வு.







கோணமுட்டாவ இல்லத்தில் எமது குழுவினர்.












இராணுவ வீரரும் நாமும்.





அஞ்சலி நிகழ்வு.





அஞ்சலி நிகழ்வு.



## 17.01.2015 வெள்ளிக்கிழமை.

இரவு எட்டு மணியளவில் எமது மலையகப் பயணம் இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அதனடிப்படையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இரவு உணவை முடித்தபின் சைவ மகா சபையைச் சேர்ந்தோர் சிவன் மானிட மேம்பாட்டு நிறுவன உறுப்பினர்கள் சந்நிதியான் ஆச்சிரம அன்பர்கள் அனைவருமாக உதவிப் பொருட்களுடன் இம்முறை பொலநறுவை சமனப்பிட்டி என்ற பிரதேசத்தில் அமைந்த முத்துக்கல் என்ற கிராமத்தில் உள்ள ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப் பாடசாலை மாணவர்களையும், அம்பாறை மாவட்டத்திலுள்ள பாணமைப்பற்று கோமாரியிலுள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களையும் பார்வையிடும் முகமாகவும் அவர்களது கோரிக்கை சம்பந்தமாகவும் கலந்தாலோசிக்கும் எண்ணத்துடன் எமது பயணம் ஆரம்பமாகியது. வழமைபோன்று இரவு 11மணியளவில் கோவில்குளத்தை அடைந்து சிவன்கோவில் வளாகத்தில் மீதி இரவுப் பொழுதைக் கழித்து மறுநாள் அதிகாலை எமது பயணத்தை ஆரம்பித்தோம்.

## 18.01.2015 சனிக்கிழமை.

காலை 5 மணியளவில் சிவன் ஆலய வளாகத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட எமது பயணம் 10 மணி அளவில் பொலநறுவை மாவட்டத்தில் உள்ள சாரதாதேவி அறநெறிப் பாடசாலையை அடைந்தது. அங்கே எமது குழுவினருக்கு மாணவ அணிவகுப்போடு கூடிய வரவேற்பு இடம்பெற்றது. எம்மை அழைத்துச் சென்று பரந்து நிழல் பரப்பிக் கொண்டு இருந்த ஆலமரத்தின்கீழ் பாய்களை விரித்து அதன்மேல் அமர்ந்து அறநெறிப் போதனைகளைக் கற்கும் மாணவர்களிடையே எம் குழுவினருக்கு ஆசனமளித்து அமரவைத்து எமது சோர்வைப் போக்கும் முகமாக அவர்களால் தயாரிக்கப்பட்ட இலைக்கஞ்சி வழங்கப்பட்டது. அதன் சுவை சொல்லுந்தரமன்று. அவ் அறநெறிப் பாடசாலையின் நிர்வாகியாக விளங்கும் திரு பா. சுதாகரன் அவர்கள் தங்களிடம் 210 சிறார்கள் கல்வி கற்கிறார்கள் என்றும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களாக 17 ஆசிரியைகள் உள்ளனர் என்பதோடு இக் கிராமத்தைச் சுற்றிவர பெரும்பான்மை இன மக்கள் வாழ்வதால் மிகவும் இக்கட்டான சூழலில் இப்பாட சாலையை நடாத்துவதாகவும் கூறினார். அத்துடன் தங்களால் நிர்மாணிக்கப்பட்டு வரும் அறநெறிப் பாடசாலைக் கட்டடத்துக்குரிய அஸ்பெஸ்டல் சீற் வாங்குவதற்கு உதவி புரியும்படி எமது குழுவினரிடம் கோரிக்கை ஒன்றை முன் வைத்தார். மண்டபம் இல்லாத வகையில் மழையோ வெயிலோ இந்த ஆலமரம்தான் தஞ்சம் என்று கூறியதையிட்டு அவர்களது கோரிக்கையில் உள்ள உண்மை நிலையை நாம் அனைவரும் உணர்ந்துகொண்டோம்.

அதன் அடிப்படையிலும், அங்கே கல்வி கற்கும் அச்சிறார்களின் செயற்பாடுகள் மனதைத் தொட்டதும் அக்கட்டடத்திற்குப் போடுவதற்குரிய 110 சீற்களையும் வழங்குவதோடு ஆசிரியைகளுக்கும் மாதாந்த நிதி உதவியை வழங்குவதாகவும் ஆச்சிரமம் சார்பாக உறுதி வழங்கினேன். நாம் கொண்டுபோன சத்துமா உட்பட கற்றல் உபகரணங்களையும் வழங்கிவிட்டு 11.30 மணியளவில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கோமாரியில் அமைந்த ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலையைப் பார்வையிடும் முகமாக எமது பயணம் தொடர்ந்தது.

எமது மதிய உணவை அம்பாறை தம்பிலு என்ற கிராமத்தைச் சேர்ந்த சைவநெறிக்கூட அமைப்பாளர் திரு கணேசன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். அதற்கு முன்பாக எம்மோடு இணைந்து வந்த திரு தியாகலிங்கம் அவர்களது நண்பர் கல்லடியிலுள்ள தமது வீட்டுக்கு எம்மை அழைத்திருந்தார். நாமும் போகும் வழியில்தானே சிறிது நேரம் அவர்களோடும் இருந்துவிட்டுப் போவோம் என்ற முடிவுடன் அவர்கள் வீட்டிற்குச் சென்ற சமயம் அவர்களோடு மதிய உணவில் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொண்டமையால் எமது குழுவிலுள்ள ஒரு சிலர் மதிய உணவு அருந்தியபின் அங்கிருந்து எமது பயணம் ஆரம்பமாகியது. மூன்று மணிக்கு திரு கணேசனால் ஏற்பாடு செய்யப்பட்ட மதிய உணவில் நாமனைவரும் பங்கு பற்றியதோடு மாலை நான்கு மணியளவில் கோமாரியில் இயங்கிவந்த ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலையை அடைந்தோம். எமது வரவை எதிர்பார்த்து அப்பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட அனைவரும் பாடசாலை மண்டபத்தில் அமர்ந்திருந்தார்கள். அவர் களுக்கென்று நிலையான கட்டடம் இல்லாத நிலையில் அங்கேயுள்ள பாடசாலையில்தான் அறநெறிப் பாடசாலை இயங்குகின்றது என்பதை நாம் தெரிந்துகொண்டு அவர்களது தேவைபற்றி நாம் அறிந்து அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்னும் வினாவோடு அவர்கள் கருத்தை செவிமடுத்தோம். தாம் மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் இருந்து இந்த அறநெறியை போதித்து வருவதாகவும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங் களும் சீருடையும் தேவையாக உள்ளது என்பதனைக் கூறி அதனை ஒழுங்கு செய்துதருமாறும் கேட்டுக் கொண்டார்கள். நாமும் இவ்விடயம்பற்றி ஆச்சிரமம் சென்று முடிவு தெரிவிப்பதாகக் கூறியதுடன் நாம் கொண்டுபோன கற்றல் உபகரணங்களையும் சத்துமா வகைகளையும் பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளித்தோம். அங்கிருந்து எமது பயணம் உகந்தை முருகன் ஆலயத்தை அடைந்தது. அன்றிரவு முருகன் ஆலயத்தில் தங்குவதற்குரிய வழிமுறைகளை திரு கணேசன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

**18.01.2015 ஞாயிற்றுக்கிழமை.**

காலை உகந்தை முருகனது வழிபாட்டை தரிசித்தபின்னர் ஆலய சுற்றாடலில் உள்ள தேநீர்க் கடையில் காலை உணவை முடித்துக்கொண்டு 9 மணி அளவில் பதுளை கதிரேசன் ஆலயத்தில் நடைபெறும் அறநெறிப் பாடசாலையைப் பார்வையிடும் நோக்கில் பகல் 12 மணி அளவில் ஆலயத்தை அடைந்தோம். அங்கே கல்வி கற்கும் மாணவர்களையும், ஆசிரியர்களையும் கண்டு அவர்களுக்கும் கற்றல் உபகரணங்களையும் சத்துமா பைக்கற்றுக் களையும் வழங்கி அவர்களது குறைபாடுகளை செவிமடுத்து எம்மால் ஆனவரை உதவிகளை வழங்குவோம் என்பதை உறுதிப்படுத்தி அங்கிருந்து பதுளை மகளிர் இல்லத்தை அடைந்தோம். அங்கிருந்த குழந்தைகளோடு சுவாமி கலியுகவரதன் தலைமையில் ஒரு கூட்டுப்பிரார்த்தனையும், ஆன்மீகம் சம்பந்தமாக ஒரு கருத்தரங்கு நிகழ்வும் இடம்பெற்றது. குழந்தைகளுக்கான பஜனைக்குரிய உபகரணங்களோடு பிரத்தியேகமாக இரண்டு வயலின் தேவையாக இருக் கின்றது என்ற தமது கோரிக்கையையும் முன்வைத்தனர். அதனைத் தொடர்ந்து எமக்குரிய இரவு உணவை இல்லத்திலேயே முடித்துக்கொண்டு இரவு 8 மணியளவில் ஆரம்பித்த பயணம் மறுநாள் 19.01.2015 காலை ஆச்சிரமத்தை வந்தடைந்தது.

**06.02.2015 வெள்ளிக்கிழமை.**

இரவு 8 மணியளவில் எமது மலையகப் பயணம் ஒழுங்கு செய்யப்பட்டு அதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தோடும் ஆச்சிரமத்தைச் சார்ந்தோர்களும் சைவ மகாசபை அங்கத்தவர் களும், சிவன் மானுட மேம்பாட்டு அங்கத்தவர்களுட்பட இருபது பேருடன் மலையகம் நோக்கிய பயணம் ஆரம்பமாயிற்று. வழமைபோன்று கோவில் குளம் சிவன் கோவில் வளாகத்தில் தங்கியிருந்து மறுநாள் காலை எமது பயணம் தொடர்ந்தது.

**07.02.2015 சனிக்கிழமை.**

காலை 5 மணியளவில் எமது பயணம் ஆரம்பமாயிற்று. அன்று முற்பகல் பொலநறுவையில் உள்ள ஆதிகால சிவன் கோவிலைப் பார்வையிடும் எண்ணம் என் மனதில் உதித்தது. அதனைச் செயற்படுத்தும் முகமாக எமது குழுவினரோடு அக்கோவில் அமைந்த பகுதியை விசாரணை மூலம் தெரிந்து பார்வையிடுவதற்குரிய கட்டணம் நூறு ரூபாவை (பேருந்து) செலுத்தி உள் நுழைந்தோம். ஆனாலும் வெறுங்கையுடன்தான் போயிருந் தோம். ஏனெனில் இவ் ஆலய வழிபாடு எமது அட்டவணையில் உள்வாங்கப்படவில்லை. அத்துடன் ஆலயம் எந்த நிலையில் இருக்கின்றது என்றும் எனக்கோ எம் குழுவினருக்கோ தெரியாது. ஆலயம் இருக்கும் பகுதியை அண்மித்தபொழுது ஒரு பௌத்த மதம் சார்ந்த ஒரு குடும்ப அங்கத்தவர்கள் இருபதுபேர் வரை பொங்கல் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தார்கள். எமது குழுவினருக்கு இச்செயற்பாட்டின் தன்மை ஒரு அருட்செயலாகவே அமைந்திருந்தது. சன நடமாட்டம் இல்லாத பகுதியில் அமைந்த இச்சிவன் ஆலயத்தின் பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த அக்குழுவினரிடம் அவர்கள் மொழி தெரிந்த ஒரு சில அன்பர்கள் அவர்களை அணுகி என்ன காரணத்துக்காக இச்செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்றபொழுது, தங்கள் குடும்பத்தில் குழந்தைகள் இல்லை என்றும் இச் சிவன் ஆலயத்தில் இச்செயற்பாட்டின் மூலம் வழிபாடு இயற்றினால் குழந்தைச் செல்வம் கிடைக்கும் என்பது ஐதீகம். அதனடிப்படை யில் இப்பூசை வழிபாட்டை மேற்கொள்கின்றோம். இவ் ஆலயத்தின் மகிமை இதுதான் என்று கூறினார்கள்.

இடிந்தும், உடைந்தும் கவனிப்பாரற்று இருக்கும் இச்சிவன் இவ்வளவு மகிமை வாய்ந்தவரா எனும் எண்ணம் என்னுள் எழ நாமும் புதினம் பார்ப்பதுபோல் வெறுங்கையுடன் வந்திருக்கிறோம் எனும் கவலையுடன் ஆலய வளாகத்தைச் சுற்றி வந்து வழிபட்டு பொங்கலில் ஈடுபட்ட குடும்பத்தினருக்கு எமது ஆசிகளைத் தெரிவித்துவிட்டு முத்துக்கல் எனும் கிராமத்திலமைந்த சாரதாதேவி அறநெறிப் பாடசாலையை நோக்கி எமது பயணம் தொடர்ந்தது. ஆனாலும் மனதினுள் சிந்தனை. வேற்றுமதம் சார்ந்த ஒரு குடும்பத்தினர் குழந்தை வரம்கேட்டு எமது ஆலயத்துக்கு நம்பிக்கையுடன் வர நாங்கள் எல்லாம் எங்கெங்கோ போய்க் கொண்டிருக் கிறோம் என்ற எனது எண்ண ஓட்டத்துடன் பேருந்தும் அன்னை ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப் பாடசாலை வளாகத்தை அடைந்தது. எம்மை வரவேற்ற ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆசிகூறி அங்கே இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குரிய பரிசளிப்பு நிகழ்வில் எமது குழுவினர் கலந்து அவர்களுக்குரிய பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்கள்.

மலையகப் பயணம் இரண்டில் அவர்கள் கேட்ட கோரிக்கையின் பிரகாரம் 110 அஸ்பெஸ்டஸ் சீற் அதற்குரிய முகட்டோடுகள் ஆணி வகைகள் 24.01.2015 சங்கானை பாக்கியரெட்ணம் ஹாட்வெயர் இரும்புக் கடையில் இரண்டு இலட்சத்து மூவாயிரத்து நூற்றி நாற்பத்தேழு (2,3147.00) ரூபா பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தால் அனுப்பப்பட்டு இருந்தது. இச்செயற்பாட்டிற்கு மக்கள் வங்கி யாழ் பிராந்திய முகாமையாளராகக் கடமையாற்றிய திரு சி. பத்மநாதன் அவரோடு இணைந்த சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் வ. சண்முகநாதமுதலி உட்பட மக்கள் வங்கி ஊழியரதும் சந்நிதியான் ஆச்சிரமத்தினதும் இணைந்த பங்களிப்பே மூலகாரணமாயமைந்தது என்பதை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன். எமது குழுவினர் கட்டப்பட்டுக் கொண்டு இருக்கும் கட்டிடத்தைப் பார்வையிட்டதுடன் ஆசிரியைகளுக்குரிய தைமாத நிதி உதவியையும் கையளித்து அவர்களால் அளிக்கப்பட்ட மதிய போசனத்திலும் பங்குபற்றி பிற்பகல் 3 மணியளவில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்த கோமாரியில் உள்ள ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குரிய சீருடையைக் கையளிக்கும் வண்ணம் எமது பயணம் தொடர்ந்தது.

மாலை கோமாரியை அடைந்து அவர்கள் கேட்டுக் கொண்டதன் பிரகாரம் 1250 மீற்றர் ஆண் பெண் பிள்ளைகளுக்குரிய சீருடைத் துணிகளை வழங்கிவிட்டு இரவு 7 மணியளவில் பதுளையை நோக்கிய எமது பயணம் இரவு 11 மணியளவில் கதிரேசன் ஆலயத்தை வந்தடைந்து இரவுப் பொழுதை அங்கேயே கழித்தோம்.

**08.02.2015 ஞாயிற்றுக்கிழமை.**

காலை ஆறுமணிக்கு பதுளை கதிரேசன் ஆலயத்திலிருந்து அப்புத்தளையிலுள்ள கோணமுட்டாவ என்னும் இடத்தில் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள சைவ அறநெறிப் பாடசாலையின் மூன்றாம் வருட பூர்த்தி விழாவுடன் கூடிய கண்ணப்ப நாயனார் குருபூசையில் பங்குபற்றும் முகமாக எமது குழுவினரின் பயணம் அமைந்திருந்தது. இந்நிகழ்வுக்குரிய சிறப்பு விருந்தினராக கண்டியில் உள்ள சின்மயா மிஷனைச் சார்ந்த சுவாமி கார்த்திக்கும் எம்மோடு இணைந்து விழாவைச் சிறப்பிக்க வந்திருந்தார். முத்துமாரி அம்மன் ஆலய பூசை வழிபாடுகளில் நாம் கலந்து வழிபாடியற்றியபின் கோணமுட்டாவ தமிழ் ம. வித்தியாலய மண்டபத்திற்கு எம்மை அழைத்துச் சென்றதும் விழா ஆரம்பமாகியது. அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளோடு, கவிமணி அன்னைதாசனின் பக்கவாத்திய சகிதம் நடாத்தப்பட்ட இசைச் சொற்பொழிவும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து எம்மோடு வந்த சொற்பொழிவாளர் இரா. கேதீசனுடைய ஆன்மீக விழிப்புணர்வு பற்றிய கருத்தரங்கும் இடம்பெற்றது. அந்நிகழ்வின் சான்றாக சுவாமி கலியுகவரதன் அவர்கட்கும், எனக்கும் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. இவ்விழாவின்போது சுவாமி கலியுகவரதன், சுவாமி கார்த்திக் முதலியோர் சமூக விழுமியங்களோடு கூடிய அறநெறிப் போதனைகளை அவர்களுக்கு வழங்கி சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட ஆசிரியை களுக்குரிய 25 சேலைகளை கையளித்து விழாவைச் சிறப்பித்தார்கள். அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்தோரின் பலவிதமான கோரிக்கைகளையும் உள்வாங்கிக் கொண்டு மாதம் ஒருமுறை வரும்போது படிப்படியாக எம்மால் ஆன உதவிகளை வழங்குவோம் என்று கூறி அனைவரிடமும் விடைபெற்று மாலை 6 மணியளவில் பதுளை கதிரேசன் ஆலயத்தை அடைந்தோம்.



சமனப்பிட்டி ஸ்ரீ சாரதா அறநெறிப் பாடசாலை நிகழ்வு.





அம்பாறை - கோமாரி அறநெறிப்பாடசாலை மாணவர்களுடன்...





உகந்தை முருகன் ஆலயத்தில் எமது குழுவினர்.





பொலநறுவை கதிர்வேலாயுத சுவாமி அறநெறிப்பாடசாலை மாணவர்களுடன்...









அம்பாறை மாவட்டம் இறக்காமம் மாணிக்க விநாயகர் ஆலயத்தில்
இடம்பெற்ற சிவதீட்சை வழங்கும் நிகழ்வு.





செளதம் தமிழ் மகா வித்தியாலய நிகழ்வு.





மகளிர் இல்லத்தில் எமது குழுவினருடன் கூட்டுப்பிரார்த்தனை.





பதுளை மகளிர் இல்ல பிள்ளைகளுக்கு சங்கீத உபகரணங்கள் வழங்கல்.






பதுளை மகளிர் இல்ல பிள்ளைகளுக்கு சங்கீத உபகரணங்கள் வழங்கல்.



அதனைத் தொடர்ந்து எமது பிரயாண சோர்வை நீக்கிக்கொண்டு இரவு 7 மணிக்கு பதுளை மகளிர் இல்லத்தை அடைந்து திரு த. கணேசமூர்த்தியின் அனுசரணையுடன் சந்நிதியான் ஆச்சிரமம் கொண்டு வந்திருந்த 2 வயலின், சுருதிப்பெட்டி, தாள வகைகள், பஜனைப் புத்தகங்கள் என்பவற்றை வழங்கி அவர்களால் வழங்கப்பட்ட இரவு உணவையும் ஏற்றுக்கொண்டபின் ஆச்சிரமம் நோக்கிய எமது பயணம் தொடர்ந்து, மறுநாள் அதிகாலை 3 மணியளவில் ஆச்சிரம வாயிலை அடைந்ததுடன் நிறைவுக்கு வந்தது.

## எது உண்மையான வழிபாடு?

அன்பிலும், இதயத்தின் தூய்மையான பக்தியிலும்தான் மதம் வாழ்கிறதே தவிர, சடங்குகளில் மதம் வாழவில்லை. ஒருவன் உடலும் மனமும் தூய்மையாக இல்லாமல் கோயிலுக்குச் செல்வதும் இறைவனை வழிபடுவதும் பயனற்றவை. உடலும் மனமும் தூய்மையாக இருப்பவர்களின் பிரார்த்தனைகளை இறைவன் நிறைவேற்றுகிறார். ஆனால் தாங்களே தூய்மையற்றவர்களாக இருந்துகொண்டு, பிறருக்கு மதபோதனை செய்பவர்கள் இறுதியில் தோல்வியே அடைகிறார்கள். புற வழிபாடு என்பது, அக வழிபாட்டின் அடையாளம் மட்டுமே ஆகும். அக வழிபாடும் தூய்மையும்தாம் உண்மையான விஷயங்கள். இவையின்றிச் செய்யப்படும் புற வழிபாடு பயனற்றது. இதை நீங்கள் மனதில் பதிய வைத்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள். நாம் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; பிறகு ஒரு திருத்தலத்திற்குச் சென்றால், அந்தப் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டுவிடும் என்று நினைக்கும் அளவிற்குக் கீழான நிலைக்கு, இந்தக் கலியுகத்தில் மக்கள் வந்துவிட்டார்கள். தூய்மையற்ற உள்ளத்துடன் கோயிலுக்குச் செல்லும் ஒருவன், ஏற்கனவே தன்னிடம் இருக்கும் தன் பாவங்களுடன் மேலும் ஒன்றை அதிகப்படுத்துகிறான்; கோயிலுக்குப் புறப்பட்டபோது இருந்ததைவிட, இன்னும் மோசமானவனாக அவன் வீடு திரும்புகிறான்.

திருத்தலங்கள், புனிதமான பொருள்களாலும் மகான்களாலும் நிரம்பி இருப்பவை. மகான்கள் வாழ்கின்ற இடங்களில் கோயில் எதுவும் இல்லையென்றாலும், அந்த இடங்கள் திருத்தலங்கள்தான். நூறு கோயில்கள் இருந்தாலும், அங்கே புனிதமற்றவர்கள் இருப்பார்களானால் அங்கு தெய்வீகம் மறைந்துவிடும். திருத்தலங்களில் வாழ்வதும் மிகவும் கடினமான செயலாகும் காரணம், சாதாரண இடங்களில் செய்யும் பாவங்களைச் சுலபமாக நீக்கிக்கொள்ள முடியும். ஆனால் திருத்தலங்களில் செய்யும் பாவத்தை நீக்கவே முடியாது. மனத்தைத் தூய்மையாக வைத்திருப்பதும், பிறருக்கு நன்மை செய்வதும்தான் எல்லா வழிபாடுகளின் சாரமாகும். ஏழை எளியவர்களிடமும், பலவீனர்களிடமும், நோயாளிகளிடமும் இறைவனைக் காண்பவன்தான் உண்மையில் இறைவனை வழிபடுகிறான். விக்கிரகத்தில் மட்டும் இறைவனைக் காண்பவனின் வழிபாடு ஆரம்ப நிலையில்தான் இருக்கிறது. ஒரே ஒரு ஏழைக்காகிலும், அவனது ஜாதி, இனம், மதம் போன்ற எதையும் பாராமல்- அவனிடம் இறைவனைக் கண்டு, அவனுக்கு உதவிகள் செய்து தொண்டாற்றுபவனிடம் இறைவன் மிகவும் மகிழ்ச்சி கொள்கிறார்.

ஒரு பணக்காரனுக்கு ஒரு தோட்டம் இருந்தது. அதில் இரண்டு தோட்டக்காரர்கள் இருந்தார்கள். ஒருவன் சோம்பேறி. அவன் வேலையே செய்யமாட்டான். ஆனால் எஜமானன் தோட்டத்திற்கு வந்தால் போதும்; உடனே எழுந்துபோய் கைகூப்பி வணங்கியபடி எஜமானனிடம், ஓ, என் எஜமானின் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது! என்று புகழ்பாடி, அவர் முன்னால் பல்லை இளித்துக்கொண்டு நிற்பான். மற்றொரு வேலைக்காரன் அதிகம் பேசுவதே இல்லை. ஆனால் அவன் கடினமாக உழைப்பான், பலவகையான பழங்களையும் காய்கறிகளையும் பயிர் செய்து நீண்ட தூரத்தில் வசிக்கும் தன்னுடைய எஜமானனின் வீட்டிற்குச் சுமந்துகொண்டு செல்வான். இந்த இரண்டு தோட்டக்காரர்களில் யாரை எஜமானன் அதிகம் விரும்புவார்? சிவபெருமான்தான் அந்த எஜமானன். இந்த உலகம் அவரது தோட்டம்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...

## பயணம் - 04

**06.03.2015 வெள்ளிக்கிழமை.**

ஆச்சிரமத்திலிருந்து மாதம் ஒரு தடவை இரு நாட்கள் மலையகத்தில் எமது பணியைத் தொடருவது என்று வரையறுக்கப்பட்டதன் பிரகாரம் எமது குழுவினர் 9 பேர் பயணமானோம். வழமைபோன்று வவுனியாவில் இரவு தங்கி மறுநாள் பயணத்தை ஆரம்பித்தோம்.

**07.03.2015 சனிக்கிழமை.**

அதிகாலை எமது பயணம் ஆரம்பமாயிற்று. எமது பயண ஒழுங்கின்படி பொலநறுவை, கோமாரி ஆகிய இடங்களிலுள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் மாதாந்த நிதி உதவி, சீருடைக்கான தையற் கூலி முதலியவற்றை வழங்கி அம்பாறை மாவட்டம் தம்பிலுவில் அமைந்துள்ள சைவநெறிக் கூடத்தின் முதலாம் ஆண்டு நிறைவு நாளில் பங்குபற்றும் வண்ணம் சென்றோம். அதன் முன்னோடியாக கடந்த முறை சென்றதுபோல் வழியில் பொலநறுவை சிவன் ஆலயத்தை அடைந்தோம். கடந்த முறை ஆலயத்தின் மகிமை தெரியாது புதினம் பார்ப்பது போலப் போயிருந்தோம். ஆனால் இம்முறை பூசை வழிபாட்டுக்குரிய பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், கற்பூரம், ஊதுவத்தி முதலிய பொருட்களோடு சென்று நாமனைவரும் பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்தோம். கவிமணி அன்னைதாசனின் தேவார ஓதுதலோடு எமது வழிபாடு ஆரம்பமாகி திருவாசகம் ஓதும் முறையில் நமசிவாய வாழ்க (சிவபுராணம்) ஒருவர் சொல்ல எம் குழுவினர் அனைவரும் மனம் ஒருமித்த நிலையில் ஓதிக்கொண்டு இருந்த வேளை ஒரு பெண்மணியின் குரலும் எம்மோடு சேர்ந்து ஒலிக்கத் தொடங்கியது. எமக்கோ ஆச்சரியம். இம்முறை பயணத்தில் ஈடுபட்டவர்கள் அனைவரும் ஆண்கள். எப்படி அதுவும் இந்த இடத்தில் ஒரு பெண் குரல் எம்மோடு இணைந்தது என்ற ஆச்சரியத்துடன் பஞ்சபுராணம் ஓதப்பட்டு எமது வழிபாட்டை முடித்து திரும்பிப் பார்த்தபொழுது ஒரு இளம் தம்பதிகள் எம்மோடு இணைந்திருந்தார்கள்.

அவர்களுக்கும் விபூதி, பிரசாதங்களை கையில் கொடுத்துவிட்டு அவர்கள் விபரங்களை கேட்டபொழுது ஆண் பௌத்தமதம் சார்ந்தவர். பெண் சைவம். இருவரும் விரும்பி திருமணம் புரிந்தவர்கள். தற்பொழுது கொழும்பில் வசிப்பவர்கள். தாங்கள் இருவரும் குழந்தைச் செல்வம் வேண்டி இவ்வாலயத்துக்கு வந்ததாகவும், தாங்கள் வந்தபோது எமது வழிபாடானது ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது என்று கூறி எம்மிடம் ஆசிவேண்டி வழிபட்டார்கள். எமக்கும் ஒரே ஆச்சரியம். கடந்த முறை வந்தபோதும் இதே போன்ற ஒரு நிகழ்வு இங்கே இடம்பெற்றிருந்தது. ஆலயம் கவனிப்பாரற்றுக் கிடந்தாலும் இன்றும் அச்சிவன் மகிமை பொருந்தியவராகவே வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார் என்பது கண்டு வியப்புற்றோம்.

சுமார் 10 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள தம்பிலுவிலை 12 மணியளவில் அடைந்து சைவநெறிக் கூடத்தினரின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மூன்று நிகழ்வுகளில் கலந்து கொண்டோம்.

1. இலவச அந்திமகால ஒலிபெருக்கிச் சேவை.

2. இலவச கணனி கற்பித்தல் சேவை.

3. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளோருக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் சேவை அடிப்படையில் ரூபா 25,000. 00 சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டது.

என இம்மூன்று நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு மதியம் 1 மணி அளவில் இறக்காமம் மாணிக்கமடு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் சைவ மகா சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சிவதீட்சை நிகழ்வு தமிழ் வேத பாராயணத்துடன் இடம்பெற்று உயிரொளி சிவம் முகிலன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சிவதீட்சை வழங்கி அவர்களுக்குரிய சத்துமா, கற்றல் உபகரணங்களையும் வழங்கியபின் அவர்களால் வழங்கப்பட்ட மதிய போசனத்தை அருந்தி மாலை ஐந்து மணியளவில் பதுளையை நோக்கி எமது பயணம் ஆரம்பமாகி இரவு பத்து மணியளவில் கதிரேசன் ஆலயத்தை அடைந்தோம்.

**08.03.2015 ஞாயிற்றுக்கிழமை.**

பதுளையிலுள்ள மகளிர் இல்லத்துக்குச் சென்றுவிட்டு அங்கிருந்து அப்புத்தளை கோணமுட்டாவ அறநெறிப் பாடசாலைக்குச் சென்றோம். திரு அன்னைதாசன் இளைப்பாறிய அதிபராக இருந்த காரணத்தால் பாடசாலைச் சிறுவர்களுடன் கல்வி சம்பந்தமாக தனது ஆளுமையை வெளிப்படுத்தினார். நானும் சைவ மகா சபையைச் சேர்ந்த கஜனும் அங்கேயுள்ள பாடசாலை அதிபர் திரு யோகேஸ்வரன், ஆசிரியை திருமதி விஜயகுமாரி அவர்களோடு கற்றல் செயற்பாடுகள் பற்றி விவாதித்ததோடு நாம் கொண்டுபோன உயர்தர மாணவருக்குரிய பாடசாலை வினாவிடைப் (பரீட்சைக்குரிய) பயிற்சித்தாள்களை வழங்குவதில் ஈடுபட்டோம். மறுபுறம் சுவாமி கலியுகவரதன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் போன்றவர்களுடன் மூச்சுப் பயிற்சி, தியானம், யோகா முதலியவற்றில் ஈடுபட்டார். அதன்பின் பயிற்சியில் ஈடுபட்ட அனைவரிடமும் பயிற்சியின்போது அவர்களின் மனதில் எழுந்த எண்ணக் கருத்துக்களை எழுதச் சொல்லி வாங்கி அவர்களால் கையளிக்கப்பட்ட கருத்துக்களில் தரமானவற்றை தேர்ந்து எடுத்து அக்கருத்துக்குரியவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து அம் மாவட்டத்தில் மதமாற்றம்பற்றி பிரஸ்தாபித்ததோடு பல குறைபாடுகளையும் எம்மோடு பகிர்ந்து கொண்டார்கள். நாமும் படிப்படியாக ஒவ்வொரு பிரதேசத்துக்கும் சென்று எம்மாலான உதவிகளையும், ஆன்மீக சிந்தனை பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் முகமாக மீண்டும் வருவோம் என உறுதி கூறி மாலை பதுளை கதிரேசன் ஆலயத்தை அடைந்தோம். அங்கே சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு இரவு 8 மணியளவில் பதுளை இல்லத்தை அடைந்து அப்பிள்ளைகளோடு இரவு உணவை முடித்துக் கொண்டு அங்கிருந்து ஆச்சிரமம் நோக்கிய பயணம் ஆரம்பமாகி மறுநாள் அதிகாலை வழமைபோன்று ஆச்சிரமத்தை வந்தடைந்தோம்.

## பயணம் - 05

**17.04.2015 வெள்ளிக்கிழமை.**

எமது மலையகப் பயணம் இரவு 8 மணியளவில் ஆச்சிரமத்திலிருந்து பேருந்தில் ஆரம்பமாயிற்று.

இப்பயணத்தில் ஈடுபடுபவர்களில் அநேகர் அரச உத்தியோகத்தர்களாக கடமையாற்று வதால் விடுமுறை நாட்களாகிய சனி, ஞாயிறு தினங்களை எமது மலையகப் பயண நாட்களுக்கு ஏதுவாகவும், ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அறநெறிப் பாடசாலைகளைப் பார்வையிடும் வண்ணமும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. வெள்ளி இரவு புறப்பட்டு திங்கள் அதிகாலை எமது பயணம் முற்றுப் பெறுவதால் எம்மோடு இணைந்துவரும் அரச உத்தியோகத்தர்கள் தத்தமது பணிகளுக்கு போவதற்குரிய ஒழுங்கின் அடிப்படையில் இச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அதனடிப்படையில் வெள்ளிக்கிழமை இரவு மேற்கொண்ட இப்பயணம் இம்முறை வவுனியா கோவில் குளத்தில் தங்காது நேராக பதுளையை நோக்கிய பயணமாக அமைந்திருந்தது.

**18.04.2015 சனிக்கிழமை.**

எமது பயண ஒழுங்கின் அடிப்படையில் காலை 7 மணியளவில் இரண்டு பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களோடும், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களையும் மாணவர்களையும் சந்திக்கும் ஒழுங்கினை கோணமுட்டாவ ஆசிரியை திருமதி விஜயகுமாரி ஏற்பாடு செய்திருந்தார்கள். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அப்புத்தளையிலுள்ள தொட்டிலாகலை பிரதேசத்தில் உள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் நிர்வாகத்தினரின் அழைப்பை ஏற்று அங்கே அவர்களால் இயக்கப்பட்டுவரும் ஸ்ரீ வாணி அறநெறிப் பாடசாலையால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை நிகழ்வுகளில் பங்குபற்றும் வண்ணம் எமது நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

அந்த அட்டவணைப் பிரகாரம் முதலில் அப்புத்தளையிலுள்ள ஹல்தும்முல்லை பிரதேசத்தில் உள்ள நாமகள் பாடசாலையில் கல்வி கற்கும் 36 மாணவர்க்குரிய புத்தகப் பையுடன் கற்றல் உபகரணங்களும் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டது. உண்மையில் இவ்வகைச் செயற்பாட்டிற்கு பதுளை மகளிர் இல்லத்திலோ அல்லது பதுளை கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திலோ அந்தந்த ஆசிரியர்களை அழைத்தே வழங்கியிருக்கலாம். ஆனாலும் எப்பாடுபட்டாயினும் அந்தந்தப் பிரதேசத்துக்கு நேரில் சென்று சம்பந்தப்பட்டவர்களிடம் கையளிக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டோடுதான் எமது குழுவினர் இப்பணியை முன்னெடுத்தனர். நாம் போவதற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களெல்லாம் பின் தங்கிய பிரதேசம். உண்மையில் அப்பாதைகளில் பிரயாணம் செய்வதென்பது எம்மவர்க்கு ஒரு புதிய அனுபவம். ஆனாலும் எமது குழுவினர் அதனைப் பொருட்படுத்தாது அந்தந்த இடங்களுக்கு நேரில் சென்றபோது அங்கேயுள்ள மாணவர்கள், ஆசிரியர்களின் செயற்பாடுகள் வரவேற்புகளைப் பார்க்குமிடத்து எமது பயண வேளைகளில் நாம் பட்ட சிரமங்கள் அனைத்தும் பறந்தோடி விட்டன.

இதனைத் தொடர்ந்து ஹாலி-எல சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு ஆன்மீகம் சம்பந்தமான கருத்துக்கள் சுவாமி கலியுகவரதன் அன்னைதாசன் போன்றோரால் வழங்கப்பட்டது. அப்பிள்ளைகளுக்கும் நாம் கொண்டுபோன திராட்சைப் பழங்களைக் கையளித்தோம். அதனைத் தொடர்ந்து அப்புத்தளையை நோக்கி எமது பயணம் ஆரம்பமாயிற்று. யாழ் மண்ணுக்குரியவரும், சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் நித்திய அன்னப்பணிக்கு தன்னாலான பங்களிப்பை வழங்கிவருபவரும் அப்புத்தளையில் "சுந்தரம் ஸ்ரோர்ஸ்" எனும் வர்த்தக நிலையத்தை நிர்வகித்து வருபவருமான திரு சோமசுந்தரம் அருளானந்தம் என்பவர் அப்புத்தளை சைவ இளைஞர் மன்றத்தில் நாம் தங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். அதனடிப்படையில் அன்றைய இரவு அவ்விடத்தில் தங்கினோம். எமக்குரிய இரவு உணவு, காலைத் தேனீர் முதலியன அவரது செயற்பாட்டில் இடம்பெற்றது.

**19.04.2015 ஞாயிற்றுக்கிழமை.**

சுவாமி கலியுகவரதன் அவர்களால் அமையப்பெற்ற சிவதொண்டர் குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் எம்மோடு வருகை தந்திருந்தனர். அதனடிப்படையில் அன்று அதிகாலை தியானம், மூச்சுப்பயிற்சி என்பன அம்மண்டபத்தில் இடம்பெற்று காலை 7.30 மணியளவில் அப்புத்தளையிலிருந்து நிகழ்வு நடைபெற உள்ள தொட்டிலாகலை எனும் இடத்திற்கு எமது பேருந்தில் பயணமானோம். வழியில் சேர்வூட் எனும் பகுதியில் பாதை ஓரம் குறிஞ்சி முத்துமாரி அம்மன் ஆலய மூலஸ்தானம் திறந்திருந்த காரணத்தால் அம்மனை வெளியிலிருந்தே பார்க்கக் கூடியதாக இருந்தது. அம்மனது தோற்றமும் பொலிவும் என் மனதை ஆட்கொண்டது. பேருந்து ஆலயத்தை கடந்து சென்றபோது வரும்போது மீண்டும் வழிபடவேண்டும் என்ற எண்ணத்தை என் மனதில் தோற்றுவித்தது. அவ்வெண்ண ஓட்டத்தோடு தொட்டிலாகலையில் உள்ள முருகன் ஆலயத்தை அடைந்தோம். அங்கே ஆலய நிர்வாகத்தினர், பெற்றோர் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் ஒன்று கூடி எம்மை வரவேற்று அருகேயுள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கே சுவாமி கலியுகவரதனோடு சேர்த்து எனக்கும் பாதபூசை நிகழ்வு இடம்பெற்றதன் பின்னர் ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளில் எமது குழுவினர் உட்பட அனைவரும் பங்குபற்றி கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வு ஒன்றையும் முன்னெடுத்தோம். பூசை வழிபாடு நிறைவடைந்ததும் எமக்குரிய காலை உணவு ஆலயத்திலேயே வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நிகழ்வு நடைபெறும் பொதுநோக்கு மண்டபத்திற்கு நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். ஸ்ரீ வாணி அறநெறிப் பாடசாலையை நிர்வகித்துவரும் ஆசிரியை செல்வி சி. வெள்ளிமலர் தலைமையில் விழா ஆரம்பமாகியது. அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளுடன் எமது குழுவினரின் ஆன்மீக அருளுரைகள் இடம்பெற்றன. அதன் பின்னர் சுவாமி கலியுகவரதன், மற்றும் எமக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு நிகழ்வுகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. அச்சமயம், சேர்வூட் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு ஆலய பரிபாலன சபையைச் சேர்ந்தோர் தமது ஆலயத்துக்கு வருமாறும் போகவர வாகன வசதி செய்து தருவதாகவும் எமக்கு ஓர் அழைப்பு வந்தது. நிகழ்வுகள் முடிந்தபின் போவோம் என்று கூறி அங்கே இடம்பெறும்

நிகழ்வுகளில் ஒன்றிப்போய் இருந்தோம். நிகழ்வின் இறுதியில் விழாவுக்கு வருகை புரிந்த ஒரு பிரமுகரை உரையாற்றுமாறு செல்வி வெள்ளிமலர் மேடைக்கு அழைத்திருந்தார். வந்த பிரமுகரும் நாம் எதிர்பாராத வகையில் சந்நிதியான் ஆச்சிரமத்தைப் பற்றியும், ஆச்சிரமம் ஆற்றும் சேவை பற்றியும், ஆச்சிரமத்தில் இடம்பெறும் எமது பஜனை நிகழ்வையும் சபையில் உள்ளவர்கள் அனைவருக்கும் கூறி எம்மை வியப்படைய வைத்தார். அவர் யாராயிருக்கும் என்று சிந்தித்துக் கொண்டு இருக்கும் வேளையில் மேடையை விட்டு கீழிறிங்கிய அவ் அன்பர் தான் வடமராட்சியில் உள்ள கரவெட்டியைச் சேர்ந்தவன் என்றும், இளைப்பாறிய இலங்கை வங்கி முகாமையாளர் எனவும் தாம் நீண்டகாலம் குடும்பத்தோடு அப்புத்தளையில் வசிப்பதாகவும் தமது பெயர் கி. குலசேகரம் என்று கூறியதுடன் நாங்கள் அங்கே வந்ததைக் கேள்வியுற்று எம்மைப் பார்ப்பதற்காக வந்ததாகவும் கூறினார்.

பிற்பகல் 2.30 மணியளவில் விழா நிறைவுற்றதும் எமக்குரிய மதிய உணவு இடம்பெற்றது.

மாலை 3 மணியளவில் நான் வருவதாக சொன்ன ஆலயத்துக்கு அழைத்துப் போக ஆட்டோ ஒன்று வந்திருந்தது. நானும் சைவ மகா சபைத் தலைவர் திரு சோதிமூர்த்தியும் வவுனியா சிவதொண்டர் அமைப்பைச் சேர்ந்த மகேந்திரனும் அந்த ஆட்டோவில் ஆலயத்தை அடைந்தபோதுதான் அங்கே வீற்றிருந்து அருள்பாலிக்கும் குறிஞ்சி அம்மனின் பெருமை புரிந்தது. ஏனெனில் நான் அப்புத்தளையிலிருந்து தொட்டிலாகலை வரும் வழியில் நான் பார்த்த அதே அம்மன் ஆலயம். நான் பார்க்க வேண்டும் வழிபட வேண்டும் என்ற எண்ணத்தை பூர்த்தி செய்யும் முகமாக என்னை நேரடியாகத் தனது ஆலயத்துக்கு அழைப்பித்து தனது அருட்பார்வைக்கு என்னை ஆளாக்கிய அம்மனை வழிபட்டு அங்கே இடம்பெற்ற பூசை வழிபாட்டிலும் கலந்து கொண்டோம். பின்னர், ஆலய பரிபாலன சபையினருக்கும் ஆசிகூறி அவர்களது கருத்துக்களையும் கேட்டு மீண்டும் எமது குழுவினரோடு சேரும் வண்ணம் தொட்டிலாகலையை அடைந்தோம்.

நான் ஆலயம் சென்றிருந்த சமயம் சுவாமி கலியுகவரதன் அங்குள்ள ஆசிரியர்கள் மாணவர்களுக்கு மூச்சுப்பயிற்சி, தியானம் பற்றிய கருத்துக்களைக் கூறியதோடு செயல்முறைப் பயிற்சியையும் மேற்கொண்டிருந்தார்கள். அங்கே இடம்பெற்ற சகல நிகழ்வுகளையும் முடித்துக் கொண்டு மாலை 5 மணியளவில் தொட்டிலாகலையில் இருந்து அப்புத்தளையை நோக்கி எமது பயணம் ஆரம்பமாயிற்று. பாதையோ ஆபத்தானது, காலமோ இருட்டு. மழையுடன் கூடிய மம்மல் பொழுது. அதோடு மிக உயர்ந்த பிரதேசத்தில் நாம். அங்கிருந்து கீழ்நோக்கிய எமது பிரயாணம். எமது வாகனமோ பேருந்து. அனுபவமில்லாத பாதை. அவை எல்லா வற்றையும் உள்வாங்கி எமது பேருந்து சாரதியின் அமைதியான அளவான சாரதியத்துடன் மிக அவதானமாக கீழ் இறங்கினோம். வழியில் அதே அம்மன் ஆலயம். எமது பேருந்தை அவ்விடத்தில் நிறுத்தி எல்லோரும் வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் அப்புத்தளையில் எமக்குப் பேருதவி புரிந்த "சுந்தரம் ஸ்ரோர்ஸ்" உரிமையாளருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்து இரவு 8 மணியளவில் பதுளை மகளிர் இல்லத்தை அடைந்து இரவு உணவு உண்டோம். வழமைபோன்று 20.04.2015 திங்கட்கிழமை அதிகாலையில் நாம் ஆச்சிரமத்தை அடைந்தோம்.



தொட்டிலாகலை ஸ்ரீ வாணி அறநெறிப் பாடசாலை நிகழ்வு.





தொட்டிலாகலை முருகன் ஆலய வழிபாடும் கூட்டுப் பிரார்த்தனையும்.






ஸ்ரீ வாணி அறநெறிப் பாடசாலை நிகழ்வில் மங்கல விளக்கேற்றல்.





முருகன் ஆலய வரவேற்பு நிகழ்வுடன் கூழைய வழிபாடு.





அப்புத்தளை பொதுநோக்கு மண்டபத்தில் எமது குழுவினர்.






பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஆசிரிய பயிற்சி ஆசிரியர்களுடன்.






தொட்டிலாகலை ஸ்ரீ வாணி அறநெறிப் பாடசாலை மாணவர்களுடன்.







இல்லப் பொறுப்பாளர் திரு எம். கிருஷ்ணசாமி அவர்களோடு
அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள்.






பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயத்தில் எமது குழுவினர்.






நாயப்பெத்த அறநெறிப் பாடசாலை

ஆசிரிய சமூகத்தினருடன்.



## பயணம் - 06

**15.05.2015 வெள்ளிக்கிழமை.**

ஆச்சிரமத்தில் இரவு உணவை முடித்தபின் எமது மலையகப் பயணம் ஆரம்பமாகியது. பதுளை கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தை அதிகாலை 4 மணிக்கு வந்தடைந்தோம்.

**16.05.2015 சனிக்கிழமை.**

பதுளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய பூசை வழிபாடுகளை முடித்துக்கொண்டு பதுளை மகளிர் இல்லத்தை அடைந்து காலை உணவை முடித்துக்கொண்டோம். மகளிர் இல்லப் பொறுப்பாளர் திரு R.M. கிருஷ்ணசாமி J.P அவர்களின் கோரிக்கையின் பிரகாரம் அவரையும் எம்மோடு இணைத்து சில அறநெறிப் பாடசாலைகளையும் பாதிக்கப்பட்ட மக்களையும் பார்வையிடும் நோக்கில் எமது பயணம் அமைந்திருந்தது. வழியில் எம்மோடு கோணமுட்டாவ அதிபர் திரு யோகேஸ்வரனும் இணைந்ததன் பிரகாரம் ஹொட்டன் பிரதேசத்தில் உள்ள விவேகானந்தா அறநெறிப் பாடசாலையைப் பார்வையிடும் பொருட்டு அந்தப் பிரதேசத்தை நாடிப் பயணமானோம். உண்மையில் இப்பிரதேசங்களுக்குரிய பாதைகளின் தன்மை சொல்லுந்தரமன்று. நகரை விடுத்து பல மைல்கள் தொலைவில் நாம் போகும் தோட்டப்பகுதிகள் அமைந்திருந்ததால் அவ்விடங்களுக்குப் பிரயாணம் செய்வதென்பது மிகவும் சிரமமாகவே இருந்தது. ஆனாலும் நேரடியாக அந்தந்த தோட்டப் பகுதிகளுக்கு செல்லவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருந்து செயற்பட்டோம். சில பாதைகளில் உள்ள இடர்பாடுகளை எமது பேருந்தின் சாரதி நடந்து சென்று பார்வையிட்டபின் அந்தந்த இடங்களுக்கு நாம் நடந்தே சென்றிருந்தோம்.

நாம் அன்றையதினம் விவேகானந்தா அறநெறிப் பாடசாலை, மீதம்பட்டி ஸ்ரீ கணேச வித்தியாலயம், மீதம்பட்டி இரண்டாம் இலக்க பாடசாலை, ஸ்ரீ தாரணி அறநெறிப் பாடசாலை, கொள்ளுமண்டி தோட்டம் ஹந்த கெதர, சின்னநாவெல பாடசாலை முதலியவற்றைப் பார்வை யிட்டோம். அவர்களது விண்ணப்பங்களைப் பெற்று அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வோம் என்று உறுதி அளித்தபின் எமக்குரிய மதிய உணவை திரு R.M. கிருஷ்ண சாமியின் உறவினர் இல்லத்தில் அருந்தினோம். பிற்பகல் 2.30 மணியளவில் ஸ்பிரிங்வெல்லி என்னும் தோட்டப் பகுதியில் மண் சரிவினால் பாதிக்கப்பட்டு தேயிலைத் தொழிற்சாலையில் இருந்த மக்களுக்காகிய நிவாரணப் பொருட்களை வழங்கி அவர்களை ஆற்றுப்படுத்திவிட்டு மாலை ஐந்து மணியளவில் பதுளை கதிரேசன் ஆலயத்தை அடைந்து இரவு உணவை மகளிர் இல்லத்தில் பெற்று ஆலயத்தில் தங்கினோம்.

**17.05.2015 ஞாயிற்றுக்கிழமை.**

காலை வழமைபோன்று பதுளை கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நடைபெற்றுவரும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் வேண்டுகோளின் பிரகாரம் அங்கே கல்வி பயிலும் அறநெறிப் பாடசாலைச் சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி அவர்களோடு ஆலயத்தில் ஒரு பஜனை நிகழ்வையும் நிகழ்த்தினோம். அதனைத் தொடர்ந்து ஹாலிஎல சித்தி விநாயக ஆலய பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்று வரும் அறநெறிப் பாடசாலை

மாணவர்களைச் சந்தித்ததுடன் சுவாமி கலியுகவரதன், இளைப்பாறிய அதிபர் க. ஆனந்தராசா ஆகியோரின் ஆன்மீக உரை இடம்பெற்றது. உரையைத் தொடர்ந்து அப்பாடசாலையின் நிர்வாகி உரையாற்றினார். "மலையகத்தைப் பொறுத்தவரை ஆன்மீக விழுமிய கருத்துக்கள் அடங்கிய செயற்பாடுகள் கட்டாய தேவையாக உள்ளது. அந்த வகையில் நீங்களும் உங்களோடு இணைந்த அமைப்புக்கள் அனைத்தும் இங்கே வந்து செயலாற்ற வேண்டும்" என்ற கோரிக்கையினை முன் வைத்தார். அதனை முழுமனதோடு எமது குழுவினர் ஏற்றுக்கொண்டு கூடியவரை நாம் இவ்விடயங்களில் கவனம் செலுத்துவோம் என்பதை உறுதிப்படுத்தி மதியம் 1 மணியளவில் பதுளை மகளிர் இல்லத்தை அடைந்தோம்.

மதிய உணவை முடித்தபின் நாம் அனைவரும் கதிர்காமம் சென்று முருக வழிபாட்டை முடித்துக்கொண்டு இரவு 8 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமம் நோக்கிய எமது பிரயாணம் தொடர்ந்தது. வழமை போல திங்கள் அதிகாலை ஆச்சிரமத்தை வந்தடைந்தோம்.

**குறிப்பு:**

**எமது பயணத்தின் செயற்பாட்டை சந்நிதியான் ஆச்சிரம வெளியீடாக வரும் ஞானச்சுடர் மலரில் "கண்டோம் கதிர்காமம்" எனும் தலையங்கத்தின்மூலம் கவிமணி திரு க. ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்கள் விரிவாக எழுதுவதன்மூலம் வாசகர்கள் அறிந்து கொள்ளலாம்.**

## தேவைக்குத்தான் பெருமை

கவிஞர்களும், அறிஞர்களும் போற்றும் உயர்ந்தனவான பொருட்கள் பல கழிவுப் பொருட்களாக இருப்பதை சிந்திக்குமிடத்து எதுவும் நம் தேவையையும் இருக்குமிடத்தையும் பொறுத்ததெனும் உண்மை உணரப்படும். இந்த விதத்திலே,

தேனீக்களின் எச்சிலான தேனும்
கன்றின் எச்சிலாக்கப்பட்ட பசும்பாலும்
மலைச்சிரசிலிருந்து இழிந்த கங்கை நதிகளும்
இறந்த புழுவின் உடம்பாலான பட்டுப் புடவைகளும்
காக்கையின் எச்சத்தில் பிறந்த பெரும் ஆல விருட்சமும்

இறை வழிபாடுகளில் சிறப்பிடம் பெறுவதுடன் எப்படிப் புலவர்களாலும், அறிஞர்களாலும் போற்றிப் பெருமைப்படுத்தப்படுகின்றன என்பதைச் சிந்திக்கும்போது எது எப்பொழுது எமக்குத் தேவையோ அதுவே உயர்ந்தது என்னும் உண்மை புலனாகின்றதன்றோ, எனவே உலகத்தில் இழிந்தனவாக எதையும் கருதக்கூடாது. யாவும் இறைவன் படைப்பு என்பதை உணர்ந்து நடக்க வேண்டும்.

எமது பெரியோர் நாசி உளைவின்போது நமக்கு வேண்டியது சிறு துரும்பே எனவும், எதுவும் தேவைப்படும்போது அதுவே உயர்ந்தது எனவும் அறிவுரை கூறுவார்கள்.

எனவே நாமும் நமது வாழ்க்கையில் எதனையும் தேவையற்றதென உதாசீனம் செய்தலோ, தூக்கி வீசி விடுதலோ கூடாது.

*-அருள் ஒளி-*




விவேகானந்தர் அறநெறிப் பாடசாலை நிகழ்வுடன் சழைய
ஆலய வழிபாடு.






விவேகானந்தர் அறநெறிப் பாடசாலை நிகழ்வில் சமயச் சொற்பொழிவாளர்
திரு க. நித்தியதசீதரன்.





விவேகானந்தர் பாடசாலை நிகழ்வில்...






பதுளை மகளிர் இல்லத்தில் நடைபெற்ற அறநெறிப் பாடசாலைகட்குரிய
உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு.



## பயணம் - 07

மாதம் இருநாள் மலையகப் பயண அட்டவணைப் பிரகாரம் 19.06.2015 வெள்ளிக்கிழமை வழமைபோன்று பேருந்து மூலம் இரவு எட்டு மணியளவில் எமது குழுவினரின் மலையகம் நோக்கிய பயணம் ஆரம்பமானது.

### 20.06.2015 சனிக்கிழமை.

அதிகாலை வழமைபோன்று பதுளை கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தை அடைந்து அன்றைய நிகழ்வின் பிரகாரம் எமது பயணத்தை ஆரம்பித்தோம். அன்று காலை 9 மணியளவில் பண்டாரவளை ஊவா கல்விச் செயற்பாட்டு ஒன்றியம் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொள்வதோடு, ஒரு சில அறநெறிப் பாடசாலைகளின் செயற்பாடுகளைப் பார்வையிடும் வகையில் எமது பிரயாணம் ஆரம்பமாயிற்று. காலை 9.30 மணியளவில் கோணமுட்டாவ தமிழ் வித்தியாலய அதிபர் யோகேஸ்வரனின் தலைமையில் விழா ஆரம்பமாயிற்று. இந்நிகழ்விற்கு அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர் வர்த்தகப் பிரமுகர்கள் என மண்டபம் விழாக்கோலம் பூண்டிருந்தது. அச்செயற்பாட்டின் மத்தியில் சந்நிதியான் ஆச்சிரமம், ஆச்சிரமத்தோடு இணைந்த சைவ மகா சபை, சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் மற்றும் எம்மோடு இணைந்த அமைப்புக்கள் மலையகத்தில் ஆற்றும் பணிகள் பற்றி விதந்துரைத்ததுடன் இப் பணிகள்மூலம் ஊவா மாகாண கல்விச் செயற்பாடு மேம்படுவதாகவும் பலரது உரை அமைந்திருந்தது.

"ஊவா மாகாணத்தில் கல்வி கற்ற பதினொரு மாணவர்களையும் - உயர் கல்வி கற்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் அழைத்து - யாழ் பாடசாலைகளில் அவர்களை இணைத்து-கல்விச் செயற்பாடு உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் சைவ மகா சபையும் - சந்நிதியான் ஆச்சிரமமும் கூட்டாக நிறைவேற்றிக்கொண்டு இருப்பதால், பதினொரு பொறியியல்-மருத்துவப் பட்டதாரிகள் மலையகத்திற்கு விரைவில் கிடைப்பார்கள்" என்பதுவே அவர்களது பேச்சின் சாரம்சமாகவும் இருந்தது.

எமது அமைப்பைச் சேர்ந்த பெரியவர்கள் அனைவரையும் கௌரவிக்கும் நோக்குடன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். அதனடிப்படையில் நாமும் எமது கருத்துக்களை வழங்கி சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட முப்பதினாயிரம் ரூபா பெறுமதியான 150 உயர்தர மாணவர்களுக்குரிய பயிற்சிப் புத்தகங்களை ஒன்றியத் தலைவராக இருக்கும் அதிபர் யோகேஸ்வரனிடம் கையளித்தோம். அப்பயிற்சிப் புத்தகங்கள் அனைத்தும் அங்கேயுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. அத்துடன் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளுடன் விழா இனிது நிறைவடைந்ததுடன் விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் மதியபோசனம் வழங்கப்பட்டது. அன்றைய நிகழ்வினை நிறைவு செய்து பண்டாரவளை பொதுநோக்கு மண்டபத்தில் இரவுப் பொழுதைக் கழித்தோம்.

### 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை.

காலை எட்டு மணியளவில் எமது பயண ஒழுங்கின் அடிப்படையில் நாயபெத்த எனும் பகுதியிலமைந்த ஒரு அறநெறிப் பாடசாலையைப் பார்வையிடும் வண்ணம் எமது

பிரயாணம் ஆரம்பமாயிற்று. அப்பாடசாலையைப் பார்வையிட்ட பொழுது பாடசாலை பின்தங்கிய பிரதேசத்திலிருந்தாலும் ஆசிரியைகளின் செயற்பாட்டினால் மாணவர்கள் திறமை அடிப்படையில் முன்னேற்றம் அடைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. அவ்வகையில் அப்பாடசாலையின் வருட பூர்த்தியினை கொண்டாடும் முகமாக ஆசிரியர்களால் ஒரு விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. தமக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மூன்று பேருக்கும் அவர்களுக்குத் தெரியாமலே மாணவர்கள் அனைவரும் பணம் சேர்த்து அவர்களுக்கு நினைவுப் பரிசு மூன்றினை மாணவர்களின் தலைவனாக விளங்கும் ஒரு மாணவன் வாங்கி வைத்திருந்தான். அந்த மூன்று நினைவுப் பரிசுகளையும் எம்மைக்கொண்டு அந்த ஆசிரியர்களுக்கு வழங்கிக் கௌரவித்தமுறை எமது குழுவினர் அனைவரது மனதையும் கவர்ந்துவிட்டது. அவர்களது கலைநிகழ்வுகளுடன் சுவாமி கலியுகவரதன், கவிமணி அன்னைதாசன் போன்றோரின் ஆன்மீக உரையுடன் எமது குழுவினர் அனைவரும் தம்மாலான நிதியுதவியினை ஒன்று சேர்த்து அம்மாணவர்களுக்கு வழங்கியபின் புரோக்டன் அறநெறிப் பாடசாலையை நோக்கி எமது பயணம் ஆரம்பமாகியது. அங்கே கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியில் சுவாமி கலியுகவரதன், மருத்துவர் நந்தகுமார் அவர்களின் ஆன்மீக அறநெறிப் போதனைகள் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து அதிபர் யோகேஸ்வரன், றொசாட் தமிழ் வித்தியாலயத்துக்கு எமது குழுவை அழைத்துச் சென்று அங்கே அரங்கில் கூடியிருந்த ஆசிரியர், மாணவர் மத்தியில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளை உரைத்ததுடன் எமது குழுவினரை அறிமுகப்படுத்தி அங்கே இடம்பெற்ற கலைநிகழ்வுகளிலும் எமது குழுவினரை முதன்மைப் படுத்தும் வண்ணம் செயலாற்றியதன்மூலம் மலையகத்தில் எம்மால் மேற்கொள்ளும் கல்விப் பணிகளுக்கு அதிபர் யோகேஸ்வரன் ஒரு ஊன்றுகோலாக விளங்குவது மலையக மாணவர்கள் செய்த புண்ணியம் என்றே சொல்ல வேண்டும். ஆனாலும் இப் பாடசாலைகளுக்கு அன்றுதான் முதன் முதலாக நாம் போயிருந்த வகையில் கலை நிகழ்வுகளில் பிரகாசித்த அம்மாணவர்களுக்கு எமது குழுவினர் பணப் பரிசில்களை வழங்கி கூடியிருந்த மக்களிடம் விடைபெற்று பாடசாலை சமூகத்தினரால் எமக்குரிய மதிய போசனம் வழங்கப்பட்ட நிகழ்வுகளிலும் பங்குபற்றினோம்.

பண்டாரவளையில் அமைந்துள்ள தமிழ் மத்திய மகா வித்தியாலயம் சென்ற எமது குழுவினர் ஆசிரிய பயிற்சி வகுப்பில் உள்வாங்கப்பட்ட ஆசிரியர்கள் மத்தியில் ஆன்மீகக் கருத்தரங்கு இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து சௌதம் மகாவித்தியாலயத்தில் எமது வரவை எதிர்பார்த்து இருந்த ஆசிரியர் மாணவர் மத்தியில் சமுதாய, சமூக, ஆன்மீக சீர்திருத்தக் கருத்துரைகள் வழங்கப்பட்டன. மாணவர்களால் ஆற்றப்பட்ட கலை நிகழ்வுகளைக் கண்டு கலை நிகழ்வுகளில் திறமையாகச் செயற்பட்ட மாணவர்களுக்குரிய ஊக்குவிப்பு நிதியினை அதிபர் கையில் கொடுத்து மாணவர்களுக்கு பகிர்ந்து அளிக்குமாறு கோரியதுடன் எல்லோருக்கும் ஆசிகூறி விடைபெற்றபின் எமது பிரயாணம் பதுளை மகளிர் இல்லத்தை அடைந்தது. இரவு உணவை அங்கேயே முடித்துக் கொண்டு சந்நிதியை நோக்கி எமது பயணம் ஆரம்பமாகி 22.06.2015 திங்கள் அதிகாலை ஆச்சிரமத்தை அடைந்தோம்.



ஊவா கல்வி மேம்பாட்டு ஒன்றிய நிகழ்வுகள்.





ஊவா கல்வி மேம்பாட்டு ஒன்றியம் – ஆரம்ப நிகழ்வு.



## பயணம் - 08

ஆடி மாதத்துக்குரிய எமது மலையகப் பயணம் 10.07.2015 வெள்ளிக்கிழமை வழமைபோல் இரவு 8 மணியளவில் ஆரம்பமாகி பதுளை கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தை மறுநாள் அதிகாலை வந்தடைந்தது. மலையகத்தில் சனி, ஞாயிறு தினங்களில் எமது பணிகள் பற்றிய அறுவுறுத்தல்களோடு எமது குழுவினர் ஆயத்தமானார்கள்.

### 11.07.2015 சனிக்கிழமை.

அன்று காலை பதுளை மகளிர் இல்லத்தில் உள்ள பிள்ளைகளுக்கு சீருடைத் துணி வழங்கியபின் கடந்த பயணங்களின்போது நாம் பார்வையிட்ட ஒரு சில அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களை மகளிர் இல்லத்தில் வைத்து அவர்கள் கோரியிருந்த பொருட்களை வழங்குவதற்கு தீர்மானித்திருந்தோம். அதனடிப்படையில் ஹொப்டன் பிரதேசத்தில் உள்ள விவேகானந்தா அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான 31 கதிரைகளையும் ஹாலிஎல டொட்லண்ட் அறநெறிப் பாடசாலைக்குரிய கற்றல் உபகரணங்களோடு ஒரு தொகுதிப் பாயையும் கையளித்ததோடு ஹொப்டன் அறநெறிப் பாடசாலைக்குரிய கற்றல் உபகரணங் களும், மீதம்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாசாலை ஆசிரியர்களிடம் அவர்களுக்குரிய பொருட்களும், மீதம்பிட்டி 2 இல பாடசாலைக்குரிய பொருட்களும், பதுளை சத்திய சாயி பாபா அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு பாய் உட்பட கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து எம்மோடு இம்முறை புதிதாக இணைந்த சைவப் புலவரும் சொற்பொழிவாளராக விளங்கும் ஆசிரியர் க. நித்தியதசீதரனின் ஆன்மீக அறநெறிப் போதனைகள் இந்நிகழ்வில் கூடியிருந்தோர் மத்தியில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து அன்று மாலை மூன்று மணியளவில் கோணமுட்டாவ ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய பரிபாலன சபையால் பராமரிக்கப்பட்டுவரும் ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தர் அறநெறிப்பாடசாலையின் மூன்றாம் ஆண்டு பூர்த்தி விழாவோடு கூடிய சுவாமி விவேகானந்தர் நினைவு நாளில் கலந்து கொள்ளும் வண்ணம் எமது குழுவினரின் பிரயாணம் அமைந்திருந்தது. அங்கே இடம்பெற்ற மாணவர்களின் கலை நிகழ்வுகளோடு சைவப்புலவர் திரு க. நித்தியதசீதரனின் சமயக் கருத்துக்களுடன் கூடிய சொற்பொழிவு இடம்பெற்று, நிகழ்வு முடிவுறும் தறுவாயில் எமக்கு அப்பாடசாலைச் சமூகம் சார்பாக நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்கள். நிகழ்வுகள் முடிவுற்றதும் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் எமது இரவுப் பொழுது கழிந்தது.

### 12.07.2015 ஞாயிற்றுக்கிழமை.

காலை விநாயகப் பெருமானது பூசை வழிபாட்டில் அறநெறிப் பாடசாலைச் சமூகத்தோடு கூடிய ஒரு கூட்டு வழிபாடு இடம்பெற்றதன் பின்னர் எமக்குரிய காலை உணவை அருந்தி கோணமுட்டாவ சைவ அறநெறிப் பாடசாலையை நிர்வகிக்கும் ஆசிரியை திருமதி விஜயகுமாரியின் புதுமனை புகுவிழாவில் கலந்து கொண்டோம். அங்கே இடம்பெற்ற சடங்குகள் எல்லாம் சைவ மகா சபை உறுப்பினர்களைக் கொண்டு தமிழ் வேத முறைப்படி மிகவும் எழுச்சியுடன் இடம்பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற மதிய போசன நிகழ்விலும் நாம்

கலந்து கொண்டோம். பின்னர் அப்புத்தளை தொட்டிலாகலை அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குரிய கொப்பி வகைகள், சீருடை போன்றவற்றோடு எமது பிரயாணம் ஆரம்பமாயிற்று. மாலை மூன்று மணியளவில் அவர்களுக்குரிய பொருட்களையும் அறநெறிப் பாடசாலைக்குத் தேவையான அலுமாரி ஒன்றையும் கையளித்தோம். நாம் அங்கே செயற்பட்டுக் கொண்டு இருக்கும்போது சுவாமி கலியுகவரதனும் அவரோடு இணைந்த உறுப்பினர்களும் கோணமுட்டாவ அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுடன் ஒரு கருத்தரங்கில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். தொட்டிலாகலையிலிருந்து மாலை 5 மணியளவில் திரும்பிய எமது குழுவினரோடு சுவாமி கலியுகவரதன் மற்றும் தியாகலிங்கம் போன்றோர் இணைந்து கொண்டதன் பின்னர் பதுளையை நோக்கிய எமது பிரயாணம் மகளிர் இல்லத்தை அடைந்தது. இரவு உணவை அங்கேயே முடித்துக்கொண்டு ஆச்சிரமம் நோக்கி எமது பயணம் ஆரம்பமாகி திங்கள் அதிகாலை ஆச்சிரமத்தை அடைந்தோம்.

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...

இங்கே இரண்டு வகையான தோட்டக்காரர்கள் இருக்கிறார்கள். ஒரு வகையினர் சோம்பேறிகள் - ஏமாற்றுக்காரர்கள். அவர்கள் எதுவும் செய்வதில்லை; இறைவனின் அழகான கண்களையும் மூக்கையும் மற்ற குணநலன்களையும் பற்றியே பேசிக்கொண்டிருப்பார்கள். ஏழைகளும், பலவீனர்களுமான எல்லா மனிதர்கள், விலங்குகள் மற்றும் அவரது படைப்புக்கள் அனைத்தையும் மிகுந்த கவனத்தோடு பராமரிப்பவர்கள் மற்றொரு வகையினர்.

இவர்களில் யார் இறைவனின் அன்பிற்கு உரியவர்கள்? நிச்சயமாக அவருடைய பிள்ளைகளுக்குச் சேவை செய்பவர்களே இறைவனின் அன்பிற்கு உரியவர்கள். தந்தைக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள், முதலில் பிள்ளைகளுக்குச் சேவை செய்ய வேண்டும். இறைவனுக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள், முதலில் அவருடைய குழந்தைகளாகிய இந்த உலக உயிர்கள் அனைத்திற்கும் தொண்டு செய்ய வேண்டும். இறைவனின் தொண்டர்களுக்குச் சேவை செய்பவர்களே இறைவனின் மிகச் சிறந்த தொண்டர்கள் என்று, சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். மீண்டும் சொல்கிறேன்; மனத்தூய்மையுடன் இருங்கள்; உங்களை நாடிவரும் ஏழைகளுக்கு உங்களால் இயன்ற உதவி செய்யுங்கள். இது நல்ல செயல். இதன் பலனாக உங்கள் இதயம் தூய்மையடையும். அதனால் எல்லோரிடமும் குடிகொண்டிருக்கும் இறைவன் உங்களிடம் வெளிப்பட்டுத் தோன்றுவார். அவர் எல்லோருடைய இதயத்திலும் எப்போதும் இருக்கிறார். அழுக்கும் தூசியும் படிந்த கண்ணாடியில் நாம் நம் உருவத்தைப் பார்க்க முடியாது. அஞ்ஞானமும் தீய குணங்களும்தாம் நம் இதயம் என்ற கண்ணாடியில் படிந்திருக்கும் தூசியும் அழுக்குமாகும்.

நமது நன்மையை மட்டுமே நினைக்கும் சுயநலம், பாவங்கள் எல்லாவற்றிலும் முதல் பாவமாகும். நானே முதலில் சாப்பிடுவேன்; மற்றவர்களைவிட எனக்கு அதிகமாகப் பணம் வேண்டும்; எல்லாம் எனக்கே வேண்டும்; மற்றவர்களுக்கு முன்னால் நான் சொர்க்கம் போக வேண்டும்; எல்லோருக்கும் முன்னால் நான் முக்திபெற வேண்டும் என்றெல்லாம் நினைப்பவன் சுயநலவாதி. சுயநலம் இல்லாதவனோ, நான் கடைசியில் இருக்கிறேன். சொர்க்கம் செல்வதைப் பற்றிக் கவலையில்லை. நான் நரகத்திற்குச் செல்வதால் என் சகோதரர்களுக்கு உதவ முடியுமானால் - நான் நரகத்திற்குச் செல்லவும் தயாராக இருக்கிறேன் என்று சொல்கிறான். இத்தகைய சுயநலமற்ற தன்மைதான் ஆன்மீகம். சுயநலம் இல்லாதவனே மேலான ஆன்மீகவாதி; அவனே இறைவனுக்கு அருகில் இருக்கிறான். அவன் படித்தவனாக இருந்தாலும் சரி, படிக்காதவனாக இருந்தாலும் சரி - அவன் அறிந்தாலும் சரி, அறியவில்லை என்றாலும் சரி - அவனே மற்ற எல்லோரையும்விட இறைவனுக்கு அருகில் இருக்கிறான். சுயநலம் கொண்டவன் எல்லாக் கோயில்களுக்கும் சென்று வழிபட்டிருந்தாலும், புண்ணியத் தலங்கள் அனைத்தையும் தரிசித்திருந்தாலும், சிறுத்தையைப்போல் தன் உடல் முழுவதும் மதச் சின்னங்களை அணிந்திருந்தாலும் - அவன் இறைவனிடமிருந்து விலகியே இருக்கிறான்.

*-சுவாமி விவேகானந்தர்-*




கோணமுட்டாவில் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற
ஆசிரியை விஜயகுமாரியின் புதுமனை புகுவிழா.






கோணமுட்டாவ விவேகானந்தர் அறநெறிப் பாடசாலை சமூகத்தினருடன் எம் குழுவினர்.







பண்டாரவளை இந்து இளைஞர் மன்ற நவராத்திரி விழா நிகழ்வு.





எமது குழுவினரின் பிரயாணப் பகிர்வு.






நவராத்திரி விழா நிகழ்வில் சைவப்புலவர் நித்தியதசீதரனுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வு.






பண்டாரவளை இந்து இளைஞர் மன்ற நவராத்திரி விழாவில்
ஆச்சிரம சுவாமிகள் உரையாற்றும் நிகழ்வு.



## பயணம் - 09

07.08.2015 வழமைபோன்று எமது மலையகப் பயணம் வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பித்து மறுநாள் அதிகாலை பதுளை கதிரேசன் ஆலயத்தை அடைந்தோம்.

### 08.08.2015 சனிக்கிழமை.

காலை எட்டு மணியளவில் மகளிர் இல்லத்தில் எமது காலை உணவை முடித்தபின் எமது அழைப்பை ஏற்று வந்திருந்த கொள்ளுமண்டி தோட்டம் ஹந்த கெதர ஸ்ரீ தாரணி அறநெறிப் பாடசாலையை நாம் பார்வையிடப் போனபோது ஆசிரியர்கள் எம்மிடம் கோரியிருந்த மாணவர்களுக்குரிய கொப்பி வகைகள், பாய், வைற்போட், சீருடை முதலிய பொருட்களைக் கையளித்தோம். அதனைத் தொடர்ந்து தெல்வெத்தை ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபையினரின் அழைப்பை ஏற்று திரு கிருஷ்ணசாமி அவர்களுடன் அவ்வாலய வழிபாட்டில் ஈடுபட்டோம். அங்கே இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வுகளிலும் கலை நிகழ்வுகளிலும் பங்குபற்றி மாலை நான்கு மணியளவில் பதுளை மகளிர் இல்லத்தை அடைந்து அங்கிருந்து கண்டியை நோக்கி எமது பயணம் அமைந்திருந்தது. வழியில் சீதா அம்மன் ஆலய வழிபாட்டை முடித்து கண்டி மாவட்டத்தில் உள்ள திகல எனும் பிரதேசத்தில் உறவினர் இல்லத்தில் அவர்கள் வழங்கிய இரவுணவுடன் இரவுப்பொழுது கழிந்தது.

### 09.08.2015 ஞாயிற்றுக்கிழமை.

கண்டி ரஜவெல்ல எனும் பிரதேசத்திலமைந்த அலுத்வத்தையை அடைந்தோம். அங்கே சின்மயா மிஷனைச் சேர்ந்த கார்த்திக் சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அறநெறிப் பாடசாலைக்குரிய பெயர்ப்பலகை (பனர்) கையளிக்கப்பட்டு 65 மாணவர்களுக்குரிய சீருடைத் துணிகளும் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒரு கருத்தரங்கு நிகழ்வும் நடைபெற்று பலவிதமான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு அக்கிராம மக்களிடையே ஒரு நிர்வாகக் கட்டமைப்பும் உருவாக்கப்பட்டது. அக்கட்டமைப்பைத் தொடர்ந்து பேணி அக்கிராமத்தின் எழுச்சியாக அமையவேண்டும் எனும் கருத்தை வலியுறுத்தும் வகையில் மருத்துவர் நந்தகுமார், சுவாமி கலியுகவரதன் போன்ற எமது குழுவில் உள்ள அனைவரின் கருத்தாய் எல்லோரது உரையும் அமைந்திருந்தது.

எமக்குரிய மதிய உணவும் அவ்விடத்தில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களால் வழங்கப்பட்டது. அக்கிராம மக்களுடன் மக்களாக நாமும் ஒன்றிணைந்து அக்கிராம மக்களிடம் காணப்படாத அறநெறி ஆன்மீகச் சிந்தனைகளை வளர்ப்பதற்குரிய செயற்பாடுகளை கார்த்திக் சுவாமிகளுடன் இணைந்து முன்னெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி எல்லோரிடமும் விடைபெற்று ஆச்சிரமத்தை நோக்கிய எமது பயண ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தோம்.

அன்றைய நிகழ்வில் கார்த்திக் சுவாமிகளின் அழைப்பை ஏற்று வந்திருந்த கண்டியைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும் இந்து சுயம் சேவா சங்க உறுப்பினருமாகிய நடேசபிள்ளை லோகநாதன் அவர்கள் எமது குழுவினரை தனது இல்லத்துக்கு வருமாறு வற்புறுத்தியதன் பிரகாரம் அவரது இல்லம் சென்று அங்கே மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றிய ஒரு கருத்தாடலுடன் அவர் அளித்த தேநீர் விருந்திலும் பங்குபற்றியதன் பின்னர் இரவு 7 மணியளவில் எமது பயணம் சந்நிதியை நோக்கித் தொடர்ந்தது. 10.08.2015 திங்கள் காலையில் சந்நிதியான் ஆச்சிரம வாசலை அடைந்ததுடன் அந்தமாதப் பயணம் நிறைவுக்கு வந்தது.

**25.09.2015 வெள்ளிக்கிழமை.**

எமது பயண ஒழுங்கின் அடிப்படையில் 25.09.2015 வெள்ளிக்கிழமை வழமைபோன்று இரவு சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து எமது பயணத்தை ஆரம்பித்து மறுநாள் அதிகாலை பதுளை கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தை அடைந்தோம்.

**26.09.2015 சனிக்கிழமை.**

காலை ஆலய வழிபாட்டைத் தொடர்ந்து பதுளை மகளிர் இல்லத்தில் காலை உணவை முடித்துக்கொண்டு 9 மணியளவில் ஊவா ஹைலண்ட்ஸ் தமிழ் வித்தியாலயத்தைப் பார்வையிடும் முகமாகச் சென்றிருந்தோம். ஊவா மாகாணத்திலமைந்த உயர்தர மாணவர் களுக்கு கணிதம், விஞ்ஞானம் பயிற்சித் திட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்குரிய இருநாட் செயலமர்வில் கல்வி கற்பிப்பதற்காக சைவ மகா சபையைச் சேர்ந்த தொண்டர் அமைப்பில் ஆசிரியர்கள் குழுவில் உள்வாங்கப்பட்ட ஆ. கடம்பன், அ. சிவானந்தன், த. யதுஷன், ச. நகுல்ராஜ், இ. சிவராம் ஆகியோரும் எம்மோடு இணைந்து வந்திருந்தார்கள். இவர்களை வழிநடத்தும் முகமாக கோணமுட்டாவ அதிபர் யோகேஸ்வரனும் ஊவா மாகாணக் கல்வி ஒன்றியத்தைச் சேர்ந்த அன்பர்களோடு அன்றைய பாடத்திட்டத்திற்கமைவாக பயிற்சி வகுப்புகள் நடந்தேறின. ஊவா ஹைலண்ட் தமிழ் வித்தியாலயம், விவேகானந்தா தமிழ் வித்தியாலயம், ஹாலிஎல தமிழ் வித்தியாலயம், நாயபெத்த தமிழ் மகா வித்தியாலயம், ஸ்பிரிங்வெலி தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அவர்களது செயற்பாடுகளுக்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டு ஒவ்வொரு பாடசாலைகட்கும் ஒவ்வொரு ஆசிரியர் வீதம் பயிற்சி வகுப்புக்கள் நடத்துவதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

ஒருபுறம் கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்வேளை மறுபுறம் எமது குழுவினரின் ஆன்மீக, அறநெறி, சமூக சேவை போன்ற விடயங்கள் பற்றிய கருத்தரங்கு நிகழ்வுகளும் நடைபெற்றன. ஊவா ஹைலண்ட் மாணவர்கள் மத்தியில் சுவாமி கலியுகவரதன் திரு இரா. கேதீசன், திரு தியாகலிங்கம், திரு சோதிமூர்த்தி போன்றோர்களின் உரைகளும் இடம்பெற்றன. அங்கு எமக்கான மதிய உணவினை முடித்துக்கொண்டதுடன் தொட்டிலாகலை முருகன் ஆலய பரிபாலன சபையினரின் அழைப்பை ஏற்று ஆலய வளாகத்தை அடைந்தோம். முருகன் ஆலயத்தைப் புதிதாக நிர்மாணிக்கும் பொருட்டு எமது ஆலோசனையையும் வழிகாட்டலையும் கோரியிருந்த முறையில் எம்முடன் இணுவிலைச் சேர்ந்தவரும் ஆலய கட்டடக் கலையில் நன்கு தேர்ச்சிபெற்றவருமான திரு சிவலிங்கம் அவர்களும் எம்மோடு வந்திருந்தார். அவரும் ஆலய பரிபாலன சபையினரும் எமது குழுவினரும் இணைந்து ஆலயம் நிர்மாணிக்கும் விடயம் பற்றிய ஆலோசனையில் ஈடுபட்டதன் பிரகாரம் ஆலயம் கட்டுவதற்குரிய ஏற்பாடுகளை தாம் மேற்கொள்வதாக சபையினர் உறுதி கூறினர். எமது அன்றைய நிகழ்வுகளை முடித்துப் பதுளையை நோக்கி எமது பிரயாணம் ஆரம்பமாகி மகளிர் இல்லத்தில் இரவு உணவு உண்ட பின்னர் வழமைபோன்று கதிரேசன் ஆலயத்தில் இரவு தங்கினோம்.



பொலநறுவை சிவன் ஆலய வழிபாட்டுடன் சமனப்பிட்டி ஸ்ரீ சாரதா அறநெறிப் பாடசாலை பரிசளிப்பு நிகழ்வில்...



**27.09.2015 ஞாயிற்றுக்கிழமை.**

காலை வழமைபோன்று பதுளையிலிருந்து எமது செயற்பாடுகளை முடித்து அப்புத்தளை தமிழ் மகா வித்தியாலய சமூகத்தினரால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று எமது பயணம் அமைந்திருந்தது. அதனடிப்படையில் பாடசாலை வாயிலில் பூரண கும்பம் வைத்து மாணவர்கள் அணிவகுத்து நின்று வரவேற்ற முறையானது எமது குழுவினருக்கு மனநிறைவை அளித்ததோடு அங்கே இடம்பெற்ற நிகழ்வுகளில் உற்சாகத்துடன் கலந்துகொள்ளவும் முடிந்தது. உலக சிறுவர் தின நிகழ்வை ஒட்டி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வாக இவ்விழா அமைந்திருந்தது. எமது குழுவினரின் ஆன்மீகக் கருத்தரங்குகளுடன் சந்நிதியான் ஆச்சிரமத்தால் அங்கே கல்வி கற்கும் மாணவர்கள் அனைவருக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் விழாவை நிறைவு செய்து அனைவரிடமும் விடைபெற்று எமது குழுவினர் அப்புத்தளையிலுள்ள சேர்வூட் காயத்திரி அறநெறிப் பாடசாலையை பார்வையிடும் முகமாக சென்றிருந்தோம். அப்பாடசாலைக்குரிய கட்டட வசதி அற்ற நிலையில் அம்மன் ஆலயத்தில் நடைபெற்று வருவதாகவும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவை இடம்பெறுவதாகவும் கூறியதுடன் அறநெறிப் பாடசாலைக்கு அலுமாரி ஒன்று தேவை என்பதையும் தெரிவித்தார்கள். அவர்களது கோரிக்கையினை உள்வாங்கி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளில் கலந்து அங்கேயே மதிய உணவினை முடித்துக்கொண்டு மாலை 4 மணி அளவில் அப்புத்தளையிலிருந்து புறப்பட்டு பண்டாரவளையை அடைந்தோம்.

சௌதம் தமிழ் வித்தியாலயம், தம்பேத்தன்னை தமிழ் வித்தியாலயம், அப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரி, தொட்டுலாகலை தமிழ் வித்தியாலயம், விபுலானந்தா தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தமது கற்றல் செயற்பாடுகளை நிறைவு செய்த ஆசிரியர்களையும் இணைத்து வழமைபோன்று பதுளை கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தை அடைந்து எமது களைப்பினை நீக்கிக் கொண்டோம். இரவு 8 மணிபோல் மகளிர் இல்லத்தில் இரவு உணவை முடித்து சந்நிதியை நோக்கிய எமது பயணம் ஆரம்பமாகி திங்கள் அதிகாலை சந்நிதியை அடைந்தோம்.

மனிதன் தானே எல்லாவற்றையும் செய்வதாக எண்ணிக் கொள்கிறான். பிரச்சினையே இங்குதான் தொடங்குகிறது. நம்மையும் மீறிய ஒரு சக்தியால் நாம் இயக்கப்படுகிறோம். நாம் அச்சக்தியின் ஒரு கருவியே என்பதை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். அதைப் புரிந்து கொண்ட பின் பல துன்பங்களிலிருந்து மனம் விடுபட்டு விடும். அந்த எண்ணம் தோன்றாதவரைக்கும் நமக்கு நாமே துன்பங்களை வரவழைத்துக் கொள்கிறோம் என்பதே உண்மை. மரணத்திற்குப் பிறகு என்ன என்பதைப் பற்றி எண்ணி இப்போதே விடை தேட வேண்டாம். எதிர்காலத்தைப்பற்றி எதிர்காலமே கவனித்துக் கொள்ளும். எனவே அந்தக் கவலையை விடுத்து நிகழ்காலத்தில் நிறைவாக வாழ முற்படுங்கள். ஒருவன் தன்னைப் பற்றி முதலில் முழுமையாக அறிந்துகொள்ள வேண்டும். தன்னைப் பற்றியே சரியாகவும், முறையாகவும் அறிந்துகொள்ள முடியாத ஒருவனால் உலகத்தைப் பற்றி அறிந்துகொள்வது முடியாத செயல். அப்படி அறிந்து கொண்டதாக ஒருவன் எண்ணினால், அது அஸ்திவாரம் இல்லாமலேயே சுவர் எழுப்பியது போன்றதாகும். உடுத்தும் உடையை மாற்றிக் கொள்வதும், வீட்டைத் துறப்பதும் மட்டும் சந்நியாசமன்று. மனதில் உள்ள ஆசாபாசங்களையும், பந்தங்களையும் துறப்பதே உண்மையான சந்நியாசம்.

*-பகவான் ஸ்ரீ ரமணர்-*

## 10.10.2015 சனிக்கிழமை.

இம்முறை எம்மால் மேற்கொள்ளப்பட்ட மலையகப் பயணமானது அங்கே இடம்பெற்ற கூடுதல் மழைவீழ்ச்சி காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட ஐந்துபேர் கொண்ட பிரயாணமாக அமைந்திருந்தது. அதற்கமைவாக ஆச்சிரமத்தின் சிறிய வாகனத்தில் சனிக்கிழமை (10.10.2015) இரவு எட்டு மணியளவில் வழமைபோன்று சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து ஆரம்பித்து அதிகாலை பதுளை மகளிர் இல்லப் பொறுப்பாளர் திரு கிருஸ்ணசாமி அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட விடுதி ஒன்றினை அடைந்து எமது சோர்வினைப் போக்கி அன்றைய தினம் எம்மால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளுக்குரிய முன் ஆயத்தங்களைச் செய்வதில் ஈடுபட்டோம்.

## 11.10.2015 ஞாயிற்றுக்கிழமை.

பதுளை மகளிர் இல்லத்தை அடைந்து காலை உணவை முடித்தபின் இவ்வளவு காலமும் தற்காலிகமான இடங்களில் மாறி மாறி இயங்கிக் கொண்டிருந்த பிள்ளைகளின் இல்லத்தினை நிரந்தர கட்டிட வசதியுடன் அமைப்பதற்குரிய ஒரு சில இடங்களைப் பார்வையிடும் முகமாக திரு கிருஷ்ணசாமி J.P அவர்களுடன் அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று இல்லம் புதிதாக நிர்மாணிப்பதற்குரிய இடம் அல்லது கட்டட வசதியோடு இருக்கும் இடம் ஆகியவற்றைப் பார்வையிட்டோம். ஆனாலும் இச் செயற்பாட்டை நிறைவு செய்வதற்கு இல்லத்தில் போதியளவு நிதி நிலைமை அற்ற காரணத்தினால் சந்நிதியான் ஆச்சிரமமும் தன்னாலான பங்களிப்பை வழங்குவதாக இல்லத் தலைவரிடம் உறுதி கூறி மேலும் பற்றாக் குறையாக உள்ள நிதியினை யாரிடமாவது கேட்டுப் பெறுவோம் என்ற எமது குழுவின் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அங்கேயே மதிய உணவினை முடித்து மாலை 3 மணியளவில் கதிர்காமத்தை நோக்கிய எமது பயணம் தொடர்ந்தது. முருகனைத் தரிசித்தபின் இரவு 8.30 மணியளவில் கதிர்காமத்திலிருந்து ஆரம்பித்த பயணம் அதிகாலை 5 மணியளவில் செல்வச்சந்நிதியை வந்தடைந்தது.

### தவம் என்றால் என்ன?

நம் மனதில் என்ன விரும்புகிறோமோ அதனை அடையும்வரை காரியத்தில் கண்ணாக இருப்பதுதான் தவம். நல்லதே நினைத்தால் நல்லதே நடக்கும். வெற்றிபெற்றவனோடு பேசும்போது நாமும் வெற்றிபெற வேண்டும் என்கிற எண்ணமும், அவரைப் போல் பொறுமையாக இருந்து சாதிக்கவேண்டும் என்ற மன உறுதியும் ஏற்படும். மனிதர்களுக்கு அவர்களை அறியாமலே நிறைய ஆற்றல் இருக்கிறது. அந்த ஆற்றல் எப்போது வேலை செய்ய ஆரம்பிக்கிறது என்றால், சாதித்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் வரும்போதுதான் அந்த ஆற்றல் வெளிப்படுகிறது. அதுபோல, நமது நட்பும் சாதிக்கவேண்டும் என்கிற மன உறுதியும், தன்னம்பிக்கையும் உள்ளவர்களிடமே இருக்கவேண்டும். என்னடா இது வாழ்க்கை என்று சலித்துக்கொள்பவர்களிடத்தில் பழகினால், குட்டைக்குள் ஊறிய மட்டை எதற்கும் பயன்படாமல் போவதுபோல் போய்விடும். மழைத் தண்ணீர் குளத்தில் விழுந்தால் அதை உபயோகிக்கலாம். அதே மழைத் தண்ணீர் சாக்கடையில் விழுந்தால் யாருக்காவது பயன்படுமா? அதனால், உயர்ந்தவர்களின் நட்பும், நல்லோரின் நட்பும்தான் பயன் தரும். இப்படித்தான் நல்ல படியாக வாழவேண்டும் என்ற எண்ணமும் வரும். அதுவே, நமது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும்.



அப்புத்தளை சேர்வூட் பிரதேசத்திலமைந்த காயத்திரி அறநெறிப் பாடசாலை
பரிசளிப்பு நிகழ்வில் இளைப்பாறிய வங்கி முகாமையாளர் திரு கி. குலசேகரம் அவர்கள்
உரையாற்றும் நிகழ்வில் எமது குழுவினர்.





அறநெறிப் பாடசாலை ஆசிரியைகளுடன் மலையக சிறுவர் இல்லத் தலைவர்.





மலையக சிறுவர் இல்லத்திலும்

சமனப்பிட்டி ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப்

பாடசாலை ஆசிரியர்களுடன்.



## பயணம் - 12

### 30.10.2015 வெள்ளிக்கிழமை.

இம்முறை இடம்பெற்ற மலையகப் பயணத்தில் தீபாவளி நன்நாளை உத்தேசித்து பதுளை மகளிர் இல்லப் பிள்ளைகள், அறநெறிப் பாடசாலை ஆசிரியைகள் ஆகியோருக்கான அன்பளிப்புப் பொருட்களை வழங்குவது முதன்மையானதாக இருந்தது. அப்பொருட்களோடு ஆச்சிரம ஹயஸ் வாகனத்தில் 30.10.2015 வெள்ளிக்கிழமை வழமைபோன்று பிரயாணம் ஆரம்பமாகி சனிக்கிழமை அதிகாலை மகளிர் இல்லப் பொறுப்பாளர் திரு M. கிருஸ்ணசாமி அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட விடுதியை அடைந்து எமது காலைக் கடன்களை முடித்து அன்றைய தின நிகழ்வுக்குரிய ஆயத்தங்களைச் செய்தோம்.

### 31.10.2015 சனிக்கிழமை.

காலை 8.30 மணியளவில் இல்லத்தை அடைந்து காலை உணவை முடித்த பின்னர் எமது அழைப்பை ஏற்று இல்லத்துக்கு வருகை புரிந்த அறநெறிப் பாடசாலை ஆசிரியைகளுக்கு ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட சேலைகளை திரு கிருஷ்ணசாமி அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்கள். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த திரு செ. சிவலிங்கம் அவர்கள் இல்லப் பிள்ளைகள் 32 பேருக்குரிய உடைகளை வழங்கியதன் பிரகாரம் அவற்றை பபா சுவாமியார் வழங்கி ஆசிகூறும் செயற்பாடு இடம்பெற்றது. இணுவில் சிற்றி ஹாமென்ஸ் நிறுவனத்தால் சந்நிதியான் ஆச்சிரம அனுசரணையுடன் வழங்கப்பட்ட பிள்ளைகளுக்காகிய மறுதொகுதி உடைகளை வங்கி உத்தியோகத்தர் திரு கணேசமூர்த்தியும், திரு அருணாசலமும் வழங்கும் செயற்பாடு இடம்பெற்றது. இல்லத்தில் உள்ள பிள்ளைகளின் உடை அளவுகள் முன்பே எடுத்திருந்த காரணத்தால் அளவுப் பிரமாணம் தவறாத வகையில் அவர்களுக்குரிய உடைகள் இருந்தமை எம்மனைவருக்கும் மகிழ்வைத் தந்தன. நிகழ்வு முடிவுற்றதும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. அதன் பின்னர் பண்டாரவளை, கோணமுட்டாவ, தொட்டிலாகலை அறநெறிப் பாடசாலை ஆசிரியைகளை பண்டாரவளையில் சந்தித்து அவர்களுக்குரிய சேலைகளை வழங்கிவிட்டு கதிர்காமம் போவதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்தோம். கடந்தமுறை நாம் பதுளையிலிருந்து பசறை வீதியூடாகக் கதிர்காமம் சென்றிருந்தோம்.

ஆனால் இம்முறை பண்டாரவளை எல்ல பாதையால் வெள்ளவாயாப் பகுதியால் கதிர்காமம் போவதாயிருந்தால் இரண்டு மணித்தியாலத்தில் கதிர்காமத்தை அடையலாம் என்பதோடு அப்பாதை நேர்த்தியான பாதையாக உள்ளதால் அப்பாதையூடாக பிரயாணம் செய்வதற்கு ஆயத்தமானோம். ஆனாலும் இப்பாதை எமக்குப் புதிது. விசாரணை மூலம் பாதையைத் தெரிந்துகொண்டு மாலை 5 மணியளவில் செல்லக் கதிர்காமம் அடைந்தோம். அங்கே செல்லப்பிள்ளையாரின் பூசை வழிபாட்டில் கலந்து மாலை 6.30 மணியளவில் இந்து யாத்திரிகர் விடுதியை அடைந்து தங்கினோம்.

### 01.11.2015 ஞாயிற்றுக்கிழமை.

அதிகாலை மாணிக்க கங்கையில் நீராடி ஆலயத்தில் இடம்பெறும் 5 மணிப் பூசை வழிபாட்டில் ஈடுபட்டு ஆலய வளாகத்தில் இருந்து 7.30 மணியளவில் இந்து யாத்திரிகர்

விடுதிக்கு வந்து சேர்ந்தோம். அங்கே காலை உணவை முடித்து பொலநறுவை சமணப்பிட்டி ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப் பாடசாலையை நோக்கி எமது பயணத்தை ஆரம்பித்தோம்.

பகல் 11 மணியளவில் சமணப்பிட்டியை அடைந்து ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப் பாடசாலை ஆசிரியைகளுக்குரிய சேலைகளை வழங்கி அவர்களது அறநெறிப் பாடசாலைக்குரிய கட்டிடச் செயற்பாடுகளையும் பார்த்துவிட்டு அவர்களால் வழங்கப்பட்ட தேனீர் விருந்துப சாரத்திலும் பங்குபற்றினோம். மதியம் 1மணி அளவில் சந்நிதியை நோக்கி எமது பயணப் பாதையில் பொலநறுவை சிவன் ஆலய தரிசனத்தையும் முடித்து, பின் இரவு 10 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தை அடைந்தோம்.

## துன்பம் இறைவனின் மறக்கருணை

வாழ்க்கைக்கு வேண்டியதைச் செய்வதற்கு ஒரு காலமும், பிரார்த்தனைக்கென்று தனியாக ஒரு காலமுமாகப் பிரித்து அமைத்துக் கொள்வது அறியாமை. எல்லாக் காலத்திலுமே ஆண்டவனுடைய தோழமையை நாடவேண்டும். தொழுங் காலத்திலும் சாதாரண தொழிலில் செலவழிக்கும் காலத்திலும் இரண்டிலுமே அவன்பால் உள்ளத்தைச் செலுத்த வேண்டும்.

அருகிலிருக்கும் பகவானை இருக்கிறான் என்று கண்டு அந்த உணர்ச்சியை மனத்தில் திடமாக நிறுத்திக்கொண்டு எல்லாக் காரியங்களையும் செய்வதே என்னுடைய பிரார்த்தனை முறை. அந்த முயற்சியில் வெற்றியடைந்து பகவானுடைய சாந்நித்தியத்தை அடையும்போது, வேறு ஏதும் உணர்வில் இடம்பெறாமல் அன்பு ஒன்றே நிற்கிறது. மற்றவை அனைத்தும் மறைந்து போய்விடுகிறது.

ஆண்டவன் வேண்டுவதும் மதிப்பதும் அவன்பால் நாம் செலுத்தும் அன்பைத்தான். இந்தப் பணி என்பது முக்கியமல்ல. அவன்மேல் எவ்வளவு அன்பு வைத்துச் செய்யப்பட்டது என்பதைத்தான் அவன் பார்ப்பது. ஆஸ்திகனுக்கு உரிய குணங்கள் மூன்று. ஒன்று உறுதியான நம்பிக்கை. இரண்டாவது பகவானுடைய கருணையை ஆசையோடு எதிர்பார்ப்பது. மூன்றாவது பகவானையே காதலித்துக் கவலையற்றிருப்பது. இவற்றில் முதல் குணம் ஒன்றிருந் தாலே எல்லாம் அடையலாம். இரண்டாவதும் இருந்தால் எளிதில் சித்தியடையலாம். மூன்று குணங்களும் இருந்து அவற்றை இழக்காமல் காத்து வாழ்க்கை நடத்தினோமானால் சொல்ல வேண்டியதே இல்லை. நிச்சயமாகச் சித்தியடைவோம்.

பக்தி செய்து உய்திபெற வேண்டும் என்று தீர்மானித்தோமானால் முதலில் நாம் நம்மை நன்றாகச் சோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போது நாம் எவ்வளவு அற்பர்கள், எவ்வளவு நீசர்கள் என்பதைக் காண்போம். பகவானை நெருங்கும் தகுதி நமக்குக் கொஞ்சமும் இல்லை என்பதைக் காண்போம். ஆண்டவன் நம்முடைய ஆணவத்தை அழித்து நம்முடைய சித்த மலங்களை அறுவித்து நம்மை ஓரளவு தகுதிபெறச் செய்வதற்காக நமக்குச் சில துன்பங்களைத் தந்தும் சோதனைகளுக்கு உள்ளாக்கியும் வருவதன் காரணத்தை அப்போது நாம் காண்போம். துன்பங்கள் பலவற்றை உள்ளத்திலும் புறத்திலும் அனுபவித்த பின்னரே நாம் புனிதமடைவோம். ஆனபடியால்தான் பல கஷ்டங்களும் மக்களின் விரோதங்களும் தடைகளும் எதிர்ப்புக்களும் பக்தர்கள் அடைகிறார்கள். அதற்காக கவலைப்படலாகாது. அவையெல்லாம் ஆண்டவன் நமக்குச் செய்யும் உதவி என்று உணர்ந்து மகிழ்ச்சி அடைய வேண்டும். அவனுடைய திருவுள்ளம் என்று துன்பத்தை வரவேற்றுப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.



அறநெறிப் பாடசாலை நிகழ்வுகள்.





பரிசுபெற்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களும்,

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும்.






அப்புத்தளை தமிழ் மகா வித்தியாலய மாணவர்களுக்குரிய கற்றல்
உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு.





மாணவர்களுக்குரிய கற்றல் செயற்பாடு.



## பயணம் - 13

எமது மலையகப் பயணம் 04.12.2015 வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து ஆரம்பித்த பயணம் மறுநாள் அதிகாலை பதுளை இல்லத் தலைவரால் ஒழுங்கு செய்யப்பட்ட விடுதியை அடைந்து சிலமணி நேரம் எமது உடல் அசதியைப் போக்கி அன்று இடம்பெறும் நிகழ்விற்கு ஆயத்தமானோம். இம்முறை எமது பயணத்தின் செயற்பாடாக பண்டாரவளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான இந்து இளைஞர் மன்றம் வருடாவருடம் நடத்தும் நவராத்திரி விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக என்னையும் ஆன்மீக உரையாற்றுவதற்கு சைவப்புலவர் நித்தியதசீதரனையும் அழைத்ததன் பேரில் அந்த நிகழ்வுக்குப் போவதற்குரிய ஒழுங்கினை மேற்கொண்டிருந்தோம்.

### 05.12.2015 சனிக்கிழமை.

காலை 8.30 மணியளவில் பதுளை மகளிர் இல்லத்தில் எமக்குரிய காலை உணவுச் செயற்பாட்டினை முடித்து பண்டாரவளை நோக்கி எமது பயணம் ஆரம்பமாயிற்று. காலை 10 மணியளவில் ஆசிரியர் திரு க. இராஜேந்திரன் அவர்களின் நெறிப்படுத்தலில் விழா ஆரம்பமாகி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் சைவப்புலவர் திரு க. நித்தியதசீதரனின் அறநெறியோடு கூடிய ஆன்மீக உரை இடம்பெற்றதுடன் பண்டாரவளை மாவட்டத்தில் உள்ள அனைத்து அறநெறிப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற நவராத்திரிப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குரிய கேடயங்களும், கலந்து கொண்ட அறநெறிப் பாடசாலைகட்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்ட செய்பாட்டில் எம் குழுவினரும் ஆலய பரிபாலன சபையினரும் ஈடுபட்டனர். இந்நிகழ்வின் இறுதியில் ஆன்மீக உரையாற்றிய சைவப்புலவர் திரு க. நித்தியதசீதரனுக்கும், எனக்கும் பொன்னாடை அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கிய செயற்பாட்டுடன் விழா இனிதே நிறைவடைந்தது. சந்நிதியான் ஆச்சிரமத்தால் அன்பளிப்பாக வழங்கிய பெறுமதியான இருபது சின்னங்களைப் பெற்ற அறநெறிப் பாடசாலைகள் இனிவருங் காலங்களில் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு இணைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

விழா முடிவுற்றதும் விழாவில் கலந்து கொண்ட அனைவரிடமும் விடைபெற்று ஆலய பரிபாலன சபையினர் அளித்த மதிய போசன வைபவத்திலும் கலந்து விடைபெற்றோம். மறுநாளும் அப்புத்தளை சேர்வூட் பிரதேசத்திலுள்ள அறநெறிப் பாடசாலைகளுக்குரிய செயற்பாடுகள் உள்ள வகையில் இரவுப் பொழுதை பண்டாரவளையில் போக்குவதைக் காட்டிலும் கதிர்காம முருகன் ஆலயத்தில் இரவு தங்கி அவனது வழிபாட்டில் ஈடுபடும் எண்ணத்துடன் கதிர்காமத்தை நோக்கி எமது பயணம் ஆரம்பமாகியது.

### 06.12.2015 ஞாயிற்றுக்கிழமை.

காலை கதிர்காம பூசை வழிபாட்டினை நிறைவு செய்து 8.30 மணியளவில் அப்புத் தளையை நோக்கி எமது பிரயாணம் ஆரம்பமாகியது. காலை 11 மணியளவில் சேர்வூட் ஸ்ரீ காயத்திரி அறநெறிப் பாடசாலையை அடைந்து அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பரிசளிப்பு விழாவில் பங்குபற்றி போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குரிய பரிசில்களை

வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டதோடு சைவப்புலவர் க. நித்தியதசீதரனின் ஆன்மீக உரையும் இடம்பெற்றதைத் தொடர்ந்து அப்புத்தளையில் வசிக்கும் இளைப்பாறிய வங்கி முகாமையாளர் திரு கி. குலசேகரன் அவர்களுடைய உரையும் இடம்பெற்று அவர்கள் அனைவருக்கும் ஆசிகூறி இடம்பெற்ற மதிய போசனத்திலும் பங்குபற்றி பண்டாரவளை சென் ஜேம்ஸ் தோட்டத் திலுள்ள அறநெறிப் பாடசாலையைப் பார்வையிடும் வண்ணம் திரு க. இராஜேந்திரனோடு சென்றிருந்தோம். அவ்விடத்திலும் எமது குழுவினரின் ஆன்மீக அறநெறிப் போதனைகள் இடம்பெற்றது. அந்நிகழ்வுகளைத் தொடர்ந்து அப்பிரதேச மக்களின் அத்தியாவசிய தேவைகளை அறிந்து அவர்களிடம் விடைபெற்று ஆசிரியர் க. இராஜேந்திரன் அவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்து விடைபெற்றோம். வழமைபோன்று இரவு உணவை மகளிர் இல்லத்தில் முடித்து சந்நிதியான் ஆச்சிரமத்தை நோக்கிய பயணம் மறுநாள் திங்கட்கிழமை அதிகாலையில் நிறைவு பெற்றது.

## மனதைச் சுத்தம் செய்

செம்பைத் தேய்த்து வெளுப்பாக்கிவிட்டால் மறுநாளும் அழுக்காகத்தானே செய்கிறது. மறுபடி தேய்க்க வேண்டும். இதேபோல் நாம் சித்தத்தையும் விடாமல் அனுஷ்டானத்தால் சுத்தம் செய்துகொண்டு இருக்க வேண்டும்.

பகவான் என்று ஒருவன் சர்வ சாட்சியாகவும், சர்வ சக்தனாகவும் இருந்து கொண்டு நம் கர்மங்களுக்கு பலன் தருவான் என்ற பய உணர்ச்சிதான் யுக யுகாந்திரமாக மனிதனைத் தர்ம மார்க்கத்தில் நிறுவும் ஊன்றுகோலாக இருந்து வந்திருக்கிறது.

தேவர்களுக்கு நம்மைப்போல் மூப்பு, மரணம் இல்லை. அவர்களுக்கு நம்மைவிட சக்தி அதிகம் இருந்தாலும், அவர்கள் நம்மிடமிருந்தே ஆகுதி பெறுமாறு பகவான் வைத்திருக்கிறார். அம்பாளைவிட மங்கள வஸ்து இல்லை. ஸர்வ மங்கல்யே என்று அம்பாளைச் சொல்வார்கள். அவர்களுடன் சேர்ந்திருப்பதாலே பரமேஸ்வரனும் மங்களஸ்வரூபியாகிறார். மங்களமே வடிவான அம்பிகை மகா சுமங்கலி; அவளுடைய சௌமாங்கல்யத்திற்கு எப்படிப் பங்கம் உண்டாக முடியும்? இதனால்த்தான் ஆலகால விஷம் சாப்பிட்டும்கூட பரமேஸ்வரன் சவுக்கியமாகவே இருக்கிறார். ஆசார்யாள் (ஸ்ரீ ஆதிசங்கரர்) சவுந்தர்யலஹரியில் இப்படித்தான் கூறுகிறார்.

நான்கு பேருக்கு இரண்டு பேருக்கு அம்மா அப்பாவாகப் பலர் இருக்கிறார்கள். எல்லோருக்கும் அம்மா அப்பா யார்? பார்வதி பரமேஸ்வரர்கள்தாம் என்பதை உண்மை யாகப் புரிந்து கொண்டு விட்டால் நாம் எல்லோரும் அவர்களுடைய குழந்தைகள், சகோதர சகோதரிகள் என்கிற எண்ணம் வந்துவிடும்.

*-கோபுரம்-*



மலையகப் பயணத்தின்போது எம்மோடு இணைந்து வந்த சொற்பொழிவாளர்கள்.
திரு இரா. கேதீசன் – சைவப்புலவர் திரு கந்த சத்தியதாசன்.






பண்டாரவளை பாடசாலை நிகழ்வில் சுவாமி கலியுகவரதன்.






ஹாலிஎல சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை நிகழ்வு.





தெல்வெத்தை ஸ்ரீ முருகன் ஆலய வழிபாட்டுடன் கூடிய நிகழ்வு.





சமனப்பிட்டி அறநெறிப் பாடசாலை மாணவ மாணவிகளுடன்


கற்றல் செயற்பாடு.






சௌதம் தமிழ் மகா வித்தியாலய நிகழ்வில்...





அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே மூச்சுப் பயிற்சியில் ஈடுபடும் திரு சோதிமூர்த்தி.





ஆலய வழியாடுகளில் எம் குழுவினர்...



## பயணம் - 14

**09.01.2016 சனிக்கிழமை.**

இம்முறை எமது பயணம் தைப்பொங்கலையிட்டும், மலையக மண்சரிவினையொட்டி ஒரு வருட பயண செயற்பாட்டின் அடிப்படையில் ஆச்சிரமத்தில் நடைபெற உள்ள நிகழ்வு சம்பந்தமாக பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை, பொலநறுவை ஆகிய இடங்களில் எமது பயண ஒழுங்குகளுக்கு பேருதவி புரிந்தவர்களையும், அவர்களூடாக எம்மோடு இணைந்த அறநெறிப் பாடசாலை சமூகத்தினரையும் சந்திக்கும் வண்ணம் எமது பயணத்தை சனிக்கிழமை இரவு 8 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து ஆரம்பித்தோம். இம்முறை எமது குழுவினருடன் சைவப்புலவரும், சமயச் சொற்பொழிவாளராகிய திரு கந்த சத்தியதாசனும் இணைந்திருந்த வகையில் பதுளை கதிரேசன் ஆலயத்தை அடைந்தோம்.

**10.01.2016 ஞாயிற்றுக்கிழமை.**

காலை 8.30 மணியளவில் பதுளை மகளிர் இல்லத்தை அடைந்து காலை உணவை முடித்தபின் எமது அழைப்பை ஏற்று வருகை புரிந்த அறநெறிப் பாடசாலை ஆசிரியைகளுக்குரிய அன்பளிப்புப் பொருட்களை கையளித்து இடம்பெற உள்ள ஒருவருட செயற்பாட்டு நிகழ்வில் அவர்கள் பங்குபற்றுவதற்குரிய ஆலோசனையை வழங்கினோம். அதனைத் தொடர்ந்து மகளிர் இல்லத்திற்கு வருகைதந்த பதுளை கதிரேசன் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்குரிய இலகுமுறை யோகாசனப் பயிற்சியை சைவ மகா சபைத் தலைவர் திரு சோதிமூர்த்தி அவர்கள் வழங்கினார்கள். அதன்பின் அப்புத்தளையிலுள்ள சேர்வூட் பிரதேசத்திலமைந்த காயத்திரி அறநெறிப் பாடசாலையை நோக்கி எமது குழுவினரின் பயணம் அமைந்திருந்தது. அப்பாடசாலை ஆசிரிய மாணவர்களின் வரவேற்புடனாகிய நிகழ்வில் எம்மோடு வருகை புரிந்த சைவப்புலவர் கந்த சத்தியதாசனுடைய ஆன்மீகம் சார்ந்த சமூக நோக்குடன் கூடிய சொற்பொழிவு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அவர்கள் கோரியிருந்த அலுமாரி ஒன்றைக் கையளித்து அவர்களது அன்பான உபசரிப்பிலிருந்து விடுபட்டு பதுளை மாவட்டத்தில் உள்ள வெலிமடை பிரதேச அம்மணி வத்தை ஓம் சக்தி அறநெறிப் பாடசாலை நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் ஆசிரியை விஜயகுமாரியின் வழிகாட்டுதலோடு அந்த இடத்திற்கு எமது பயணம் ஆரம்பமாயிற்று.

மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் அடிப்படைத் தேவைகள் எதுவுமின்றி இயங்கிவரும் அந்த அறநெறிப் பாடசாலையைப் பார்க்குமிடத்து நாம் பார்த்த அறநெறிப் பாடசாலைகளில் மிகவும் பின்தங்கிய பாடசாலையாக இருந்தது. ஆனால் அப் பாடசாலையைப் பராமரிக்கும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புச் சேவையையும் தமது பிரதேசத்தில் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற முனைப்போடு செயற்பட்டவிதமும் எமது குழுவினரின் மனதைத் தொட்டது. அந்த வகையில் அவர்களது பணியை உற்சாகப்படுத்தும் முகமாக சைவப்புலவர் கந்த சத்தியதாசனுடைய உரை அமைந்திருந்தது. எமது பயண ஒழுங்கின் அடிப்படையில் இப்பாடசாலை நிகழ்வு அமையாத விதத்தில் நாம் எந்தவித உதவிப் பொருட்களும்

கொண்டுபோகவில்லை. ஆனாலும் மாணவர்கள் இருந்து கற்பதற்குரிய பாய்கள் இல்லை என்று கூறியதற்கிணங்க பாய்கள் வாங்குவதற்குரிய செயற்பாட்டிற்கு ரூபா 2000. 00த்தை ஆசிரியர்களிடம் வழங்கி அவர்களது அன்பான மதிய போசன நிகழ்வில் கலந்து பண்டார வளையினூடாக பதுளையை அடைந்து மகளிர் இல்லத்தில் இடம்பெற்ற தேனீர் விருந்து உபசாரத்திலும் பங்குபற்றியபின் எமது பயணம் பொலநறுவை ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களைச் சந்தித்து ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வு சம்பந்தமாக அவர்களோடு கலந்துரையாடியபின் ஆச்சிரமம் நோக்கிய எமது பயணத்தை ஆரம்பித்து மறுநாள் அதிகாலை ஆச்சிரமத்தை அடைந்தோம்.

## முடிவுரை

மலையக மண்சரிவின்மூலம் மாதாந்தம் எம்மால் மேற் கொள்ளப்பட்ட பயண ஒழுங்குகள் ஆவணப்படுத்தப்படவேண்டும் என்ற முனைப்போடு செயற்படவில்லை. ஆனாலும் காலப்போக்கில் இச்செயற்பாட்டின் தன்மைபற்றிய விழிப்புணர்வு எமது சமூகத் தினருக்கு ஒரு உந்துசக்தியாக விளங்கவேண்டும் என்ற நோக்குடன் எமது நினைவில் ஒன்றிய நிகழ்வுகளைத் தொகுத்து ஆவணப் படுத்தியுள்ளோம்.

நன்றி.

–சந்நிதியான் ஆச்சிரமம்–



சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்ட மலையக மனிதநேய
செயற்பாடுகளுக்கு எம்மோடு ஒன்றிணைந்து செயற்பட்ட அனைத்து அமைப்புக்களுக்கும்
சந்நிதி வேலவனது பூரண அருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து தொடரும்
இப்பணிகளுக்கு நாம் அனைவரும் ஒன்றிணைவோமாக.

–சந்நிதியான் ஆச்சிரமம்–

